விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 10 திங்கட்கிழமை (26.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 219

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## பொலிஸ் மா அதிபரை பதவி விலக்க மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கட்டளைக்கேற்ப செயற்படும் பொலிஸ்மாஅதிபர் மகிந்த பாலசூரிய அப் பதவியை உடனடியாக கட்டாயம் இராஜினாமாச் செய்துவிட வேண்டும் என்று ஜனநாயக தேசிய முன்னணியின் எம்.பியும் அம் முன்னணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பி. பிரமுகருமான அனுரகுமார திஸாநாயக்க கோரியுள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

றுகுணுப் பல்கலைக்கழகத்தின் மாணவன் சுசந்த அனுர பண்டாரவின் மரணம் தொடர்பாகப் பொலிஸ்மா அதிபரால் மாறுபட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இது ஒரு இயற்கை மரணம் என்று பொலிஸ்மாஅதிபர் கடந்த 23 ஆம் திகதி அறிக்கை வெளி (20 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கைதிகள் மீது தாக்குதல் கூட்டமைப்பு இன்று முறையிடும்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் இன்று அமைச்சர் டியூ.குணசேகரவின் கவனத்திற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கொண்டு வரவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையின் சி.ஆர்.பி.பிரிவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் ஒன்றின் போது அங்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

சி.ஆர்.பி.பிரிவின் ஜி-1, ஜி-2 அறைகளிலுள்ள தமிழ்க் கைதிகள் இந்த அறைகளில் காணப்படும் இட நெருக்கடி குறித்து அங்கு கடமையிலிருந்த (20 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் குடிப்பரம்பலை ஏற்படுத்த அரசு அக்கறையுடன் செயற்படுகிறது



## சித்தார்த்தன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வன்னிப் பிரதேசத்தில் மிகப் பெரிய குடிப்பரம்பலை ஏற்படுத்த அரசாங்கம் அக்கறையுடன் செயற்படுகின்றது. இந்த நோக்கத்தை முற்றுமுழுதாக எதிர்க்கின்றோம். இதனை நிறுத்த அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்பு ஜூலை ஏற்பட காரணமானவர் யாழில்

(கொழும்பு)

ஈழத் தமிழர்களின் வாழ்வில் ஆழப் பதிந்த ரணங்களில் ஒன்றான கறுப்பு ஜூலை இனப்படுகொலைக்கு வித்திட்ட 1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு மறைமுகமாக உதவினார் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டிருந்த இராணுவ அதிகாரியே தற்போதைய யாழ்.பிராந்திய கட்டளைத் தளபதி என அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத் தளபதி 1983 ஆம் ஆண்டு ஜூலை படுகொலை இடம் (20 ஆம் பக்கம் பார்க்க)

## சந்தேசியவுக்கு வந்தது ஆபத்து!

(கொழும்பு)

பி.பி.சியின் சிங்கள ஒலிபரப்பான சந்தேசிய உட்பட குறைந்த நேயர்களைக் கொண்ட அனைத்து ஒலிபரப்புச் சேவைகளையும் நிறுத்துவதற்குப் பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது என நம்பகமான செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரித்தானியாவின் புதிய அரசின் தேவையற்ற மற்றும் இலாபம் தராத விடயங்களை முடக்கிக் கொள்ளுதல் என்கின்ற கொள்கைக்கமைய இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-5)

## இந்திய அரசின் செல்லப்பிள்ளையாக இலங்கை அரசு செயற்படுகின்றது!

### திருமாவளவன் கண்டனம்

(சென்னை)

இந்திய மத்திய அரசு இலங்கை அரசை செல்லப் பிள்ளையாக நடத்தி வருகின்றது. அந்த துணிச்சலில்தான் ஜனாதிபதி மகிந்த, இந்திய மத்திய அரசின் இந்தியக் குழுவினரைத் தமிழர்கள் வாழும் பகுதிக்கு அனுமதிக்க மாட்டோம் எனக் கொக்கரித்திருக்கின்றார்.

இது வன்மையான கண்டனத்திற்குரியது என விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார். திட்டக்குடியில் செய்தியாளர்களைச் சந்தித்து இவ்விடயம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் திருமாவளவன் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்றாத ஒரு அரசுதான் சிங்கள அரசு.ஏற்கனவே முகாமில் உள்ள அனைத்துத் தமிழர்களையும் குடியமர்த்துவதாக மத்திய அரசிடம் உறுதியளித்திருந்தது.

ஆனால் இன்னும் 2 இலட்சம் தமிழர்கள் முகாமில்தான் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களை இன்னும் விடுதலை செய்யாமல் அகதிகளாய் நிற்கின்றனர்.

தமிழர்கள் (20 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சர்வதேச செயற்பாட்டை கட்டுப்படுத்த வியட்நாம் இணக்கம்

### இலங்கையின் கோரிக்கை ஏற்று!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு வியட்நாம் அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை அரசு வியட்நாம் புலனாய்வுத்துறையினரிடம் விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அந்நாட்டு அரசு இலங்கையுடன் இணைந்து செயற்படுவதாக உறுதியளித்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசு, வியட்நாம் புலனாய்வுத் துறையி டம் ஒத்துழைப்புக் கோரியுள்ளது.

பிரதியமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன தலைமையிலான குழுவொன்றுக்கும் வியட்நாம் வெளியுறவு அமைச்சருக்குமிடையிலான சந்திப் (20 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழரின் ஏகப் பிரதிநிதிகளல்லர்!

### மனோ கணேசன் சாடல்

(கொழும்பு)


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்ல என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் அப் பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தமிழ் மக்களின் ஒரு சாரரை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எனவே அரசு ஏனையத் தமிழ்க் கட்சிகளுடனும் கட்டாயம் பேச்சுக்களை நடத்த வேண்டும்.

அரசமைப்புத் திருத்தம் குறித்துத் தமிழ்க் கூட்டமைப்புடன் அரசு பேசி வருகின்றது. ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேசுவதன் மூலமே ஒரு (20 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



சில்லாலை புனித யாகப்பர் ஆலய யூபிலி நிறைவு விழா திருப்பலி ஒப்புக் கொடுக்கும் நிகழ்வு யாழ்.ஆயர் தலைமையில் இடம்பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பக்தர்களையும் புனிதரின் திருச் சொரூப பவனி இடம்பெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் – சுதாகர்)

# மீளக் குடியேறிய மக்களுக்கென அமைக்கப்படவுள்ள வீடுகளில் குறைபாடு

## சுட்டிக்காட்டி அரச அதிபருக்குக் கடிதம்

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை கிராமத்தின் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கென அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புக்கள் பற்றி குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சி, யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர் சீ.வீ.கே.சிவஞானம் கையொப்பமிட்டு அனுப்பிவைத்துள்ள அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஊர்காவற்றுறை மெலிஞ்சி முனை கிராமத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்காக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள குடியிருப்புக்கள் பற்றி சில குறைபாடுகள்சம்பந்தமாக தங்கள் கவனத்துக்கு கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இங்கு மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள இடம்பெயர் மக்களுக்கான குடிசை அமைப்பு ஐ.ஓ.எம் நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது. பொது நியமங்களுக்கு அமைய வேண்டிய அடிப்படை வசதிகளுடன் இடம் பெயர்ந்தோருக்கான குடியிருப்பு, மலசலகூட வசதிகள், நீர் விநியோக வசதிகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுத்துவரும் இந்த நிறுவனம் நெலிஞ்சிமுனைக் கிராமத்திற்கு மட்டும் ஏன் இவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நியமங்களுக்கு அமையாது குடியிருப்புக்களை அமைக்க ஏற்பாடு செய்துவருகிறது என்று எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அரச அதிபரால் நிர்ணயிக்கப்பட்ட இருநூற்று நாற்பது சதுர அடிக்கு பதிலாக இருநூற்று நான்கு சதுர அடியாகவும் நான்கு அடுக்கு பக்க சுவருக்கு பதிலாக இரண்டு அடுக்காகவும் இரண்டு இஞ்சி முலாம் பூசிய அலுமினியம் தகட்டுக்குப் பதிலாக சாதாரண தகரமும் பாவித்து இந்தக் குடிசைகளை அமைக்க உத்தேசிக்கப்படுவதாக அறியப்படுகிறது. ஒரு இலட்சத்து 2 ஆயிரம் ரூபா வரையான செலவு மதிப்பீட்டுக்கு பதிலாக 60 ஆயிரத்துக்கு செலவு குறைக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

அன்றாட வாழ்க்கைக்கே அல்லாடும் இந்த மக்களிடம் பயனாளிப் பங்களிப்பு என்றும் சில விடயங்கள் நிர்ணயிக்கப்படுவதாகவும் தெரிகிறது. அது சாத்தியமற்ற ஒன்றாகும். இத்துடன் பயனாளிகளுக்கு ஏற்கனவே வழங்கிய பழுதடைந்த ஓட்டைகளுடன் காணப்படும் தகடுகளை கூரைக்குப் பாவிக்கவும் எஞ்சிய கூரைக்கு தறப்பாள் சீற்றைப் பாவிக்கவும் உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

இவையெல்லாம் மாவட்ட செயலகமும் யு.என்.எச்.சி.ஆர் இன் குடியிருப்புக்குழுவும் (Shelter Cluster) நிர்ணயித்த நியமங்களுக்கு அமைவாக இல்லை என்பது தெளிவு. இந்தக் குடியிருப்புக்கள் ஏதோ இரண்டு வாரம் ஒரு மாதத்திற்கான தேவையல்ல இவர்களுக்கான நிரந்தர வீட்டுவசதி எப்போது எப்படி கிடைக்கும் என்பது எவருக்கும் தெரியாது. ஆகக் குறைந்தது மூன்று வருடங்களாவது இக் குடியிருப்புகளில் அந்த மக்கள் வாழ்ந்தாக வேண்டும். எனவே நிர்ணயிக்கப்பட்ட நியமங்களுக்கு அமைய குடியிருப்புக்கள் அமைக்கப்படுவதை உறுதி செய்யுமாறு வேண்டுகின்றோம் என்றுள்ளது. ஞ

# மாணவர்களின் கண்டனப் போராட்டம் ஜனாதிபதியின் தலையீட்டால் நிறுத்தம்

றுகுணு பல்கலைக்கழக மாணவனின் கொலை தொடர்பில் அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படவிருந்த நாடு தழுவிய போராட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலையீட்டையடுத்து நிறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் தாக்குதலுக்கு உட்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த றுகுணு பல்கலைக்கழக மாணவன் மூளை நரம்பில் பாதிப்பு ஏற்பட்டு மரணமடைந்தான்.

இந்த நிலையில் பொலிசாரின் தாக்குதலுக்கு உட்பட்ட நிலையிலேயே அவர் இந்த நிலைக்கு ஆளானதாக அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதனை முன்வைத்து நாடு தழுவிய ரீதியாக பல்கலைக்கழக மாணவர்கள் தமது விரிவுரை நடவடிக்கைகளை புறக்கணிக்கத் தீர்மானித்தனர்.எனினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உடனடியாக அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்துக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி இதனை நிறுத்துமாறு உத்தரவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை றுகுணு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூன்றாம் வருட மாணவன் உயிரிழந்தமை தொடர்பில் தமக்கு பூரண அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ச–5)

# புராதன அம்மன் சிலை வாகரையில் கண்டுபிடிப்பு

வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கதிரவெளி வெருகம்பல் மலைப் பகுதியில் புராதன காலத்தில் உருவாக்கப்பட்டதாக நம்பப்படும் உலோகத்தாலான 2 அடி உயரமான அம்மன் சிலையையும் மலையில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களையும் பிரதேச வாசிகள் நேற்று கண்டுபிடித்துள்ளனர்.

அச்சிலையை பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்லவேண்டும் என பொலிசார் கூறியுள்ள நிலையில் அச்சிலையை அதே இடத்தில் வைத்து மக்கள் வழிபாடு நடத்த அனுமதிக்கவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா கோரியுள்ளார்.

கதிரவெளி வைத்தியசாலைக்கு அருகில் செல்லும் இரண்டரை கிலோமீற்றர் தூரம் கொண்ட வெருகம்பல் வீதியின் முடிவில் உள்ள குரங்கு மாலையிட்ட அல்லது குரங்கு கொடிபோட்ட மலை எனும் பகுதியிலேயே இச்சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வாகரையை அண்டிய பகுதிகளில் இயக்கர், நாகர் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. அப்பகுதியில் வட்டவடிவான ஒரு கல்லும் அதைச் சுற்றி கற்களால் அமைக்கப்பட்ட கதிரைகளும் காணப்பட்டன. அவ்வழியால் செல்லும் மக்கள் அங்கு வழிபாடு நடத்திவிட்டுச் செல்வது வழக்கம். மதிப்புமிக்க பல பொருட்கள் இருப்பதாகவும் அங்குள்ள மக்கள் நம்புகின்றனர்.

இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வேலையின் நிமிர்த்தம் அப்பகுதிக்குச் சென்ற கனகராஜ், குமார் ஆகிய இரு பிரதேச வாசிகள் இளைப்பாறிக் கொண்டிருந்த போது மலையிலுள்ள குகையொன்றிலிருந்து வித்தியாசமான ஒளிக் கீற்றுக்கள் தென்பட்டதை அவதானித்துள்ளனர்அருகில் சென்று பார்த்தபோது உலோகத்தாலான 2 அடி உயரமான அம்மன் சிலையும் அதனை அண்டிய மலைப் பகுதியில் சில எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதையும் அவதானித்துள்ளனர். (ச–5)

# ஹொக்கிப் போட்டியில் கிறாஸ் கொப்பேர்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற் கல்வி விஞ்ஞானஅலகு மாணவர்களினால் யாழ் மாவட்ட ஹொக்கி விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட ஹொக்கி விளையாட்டுப் போட்டியில் தெல்லிப் பளை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகு மாணவர்கள் அணியும் தெல்லிப்பளை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும்போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு கோல் பெறும் வாய்ப்புக்கள் அதிகம் கிடைத்த போதிலும் அதனை உரிய முறையில் பயன்படுத்த தவறிய நிலையில் முதல்பாதி ஆட்டம் நிறைவுபெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு அணிகளும் கோல் பெறவேண்டும் என்ற துடிப்புடன் மோதிக்கொண்டன. இரு அணிகளும் கோல் பெறக் கிடைத்த சந்தர்ப்பங்களைத் தவறவிட்ட நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிபுற்றது.

போட்டியின் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட ஐந்து சமநிலை தவிர்ப்பு அடிகளை தெல்லிப்பளை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் கோல்களாக மாற்றிக் கொண்டன. எனினும் உடற் கல்வி அணியினர் முதல் நான்கு அடிகளை கோல்களாக மாற்றிய நிலையில் ஐந்தாவது அடியை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழக கோல் காப்பாளர் திலகராஜ் அதனைத் தடுத்தார்.

இந்நிலையில் கிறாஸ் கொப்பேர்ஸ் அணி 5:4 கோல்கள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (ச–5)


**மனோதத்துவ வைத்தியம்**

*(General Psychotheraphy)*

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

**மீண்டும் யாழில்**

24.07.2010 முதல் 29.07.2010 வரை மட்டுமே இருப்பார்.
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 250/–

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம்.நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள் ,வெள்ளை போடுதல், குழந்தைப் பேறின்மை ,வாதநோய், தலையிடி ,பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம் ,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (ஆண்மை சக்தி குறைவு )(பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ரூரிஸ் இன்
392, மணிக்கூட்டு கோபுர வீதி,
(சிவதர்சன் எலக்ரிக்கல்ஸ் கடைக்குமேல்)
யாழ்ப்பாணம்.
(C-725)

**தேவை**

சப்ளையர் cook ஆண், பெண் இருபாலாரும் தேவை.
தொடர்புக்கு :–
டிலன் ஹொட்டல்
133, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No : 0212224136
(C-752)

22.07.2010 முதல்
ஸ்ரீகாந், பிருத்விராஜ், கமாலினிமுகர்ஜி மற்றும் பலர் நடிப்பில்





குற்றப்பிரிவு
செல்லா சினிமா(நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00
(C-588)

# இன்று ஒரு தகவல்

## மனநோயாளிகள்

ஒருத்தர் மிகவும் கவலையோடு வந்தார்.

“ஏன் இப்படி ஒரு மாதிரியாக வருகிறீர்கள்” என்று கேட்டேன்.

“என்னைப் பார்த்து ஒருத்தன் பைத்தியம் என்று சொல்லிவிட்டான் சேர். அவன் அப்படிச் சொன்னதுக்குப் பின்னர் நான் இப்படி ஆகிவிட்டேன்” என்றார்.

“அதற்காக நீங்கள் பெருமைப்படுங்கள்” என்றேன். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்க்க ஆரம்பித்தார்.

நான் ஓஷோ சொல்லியிருக்கும் சில கருத்துக்களை எடுத்துச் சொன்னேன்.

இந்த உலகத்தில் பல பெரிய மேதாவிகளெல்லாம் சாதாரண மக்களுடைய கண்ணுக்குப் பைத்தியமாகத் தான் தெரிந்திருக்கிறார்கள்.

ஏனெனில் மற்றவர்கள் மாதிரி அவர்கள் கவலைப் படுவதில்லை. எதற்கும் இறுக்கமடைவதில்லை. மரணத்தைக் கண்டு பயப்படுவதில்லை. அற்பமான வாழ்வுக்கு ஆசைப்படுவதில்லை.

அவர்கள் முழுமையாக வாழ்கிறார்கள். இது மற்றவர்களை இது பாதிக்கிறது. ஏனெனில் இவர்களால் அவர்கள் மாதிரி அலட்டிக் கொள்ளாமல் இருக்க முடிவதில்லை. அதனால் வெறுக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

“அவன் கிடக்கிறான் பைத்தியக்காரன்” என்று சொல்லி அவர்களுக்குள் ஆறுதலடைய முயற்சி செய்கிறார்கள்.

ஓர் உண்மை தெரியுமா?

இந்த உலகத்தில் பைத்தியக்காரர்களும் புத்தி சுவாதீனம் இல்லாதவர்களும் தான் மகிழ்ச்சியாகவும் கொண்டாட்டமாகவும் இருக்க முடியும்.

அதனால் நமக்கெல்லாம் புத்திசுவாதீனத்துடன் கூடிய பைத்தியக்காரத்தனம் இருப்பது நல்லது தான். அப்படி இருந்தால் தான் வாழ்க்கையைக் கொண்டாட முடியும்.

ஒரு மனநல மருத்துவமனையில் ஒருத்தர் சிகிச்சைக்காக சேர்ந்திருந்தார். சேர்ந்து ஒருவருடமாகி விட்டது. தான் குணமாகி விட்டேன் என்பது அவருக்குத் தெரிந்து விட்டது.

டாக்டரிடம் விபரத்தைச் சொன்னார்.

அவர் சொன்னார்:

“நீங்கள் சொல்வது சரியாகத் தான் இருக்கும். இருந்தாலும் உங்களை இங்கேயே வைத்திருந்து சில சோதனைகளெல்லாம் பண்ணிப் பார்த்து விட்டு. அதற்குப் வீட்டுக்கு அனுப்புகிறோம்” என்றார். அதே மாதிரி சோதனைகள் எல்லாம் பண்ணிப்பார்த்தார். இவர் சொல்வது உண்மை தான் என்று தெரிந்தது. வீட்டுக்கு அனுப்பி வைத்து விட் டார்.

அதன் பின் இவர் தன்னுடைய அனுபவங்களைச் சொன்னார்.

“எப்படி இருந்தது மருத்துவமனை வாழ்க்கை?” என்று நண்பர்களெல்லாம் கேட்டார்கள்.

அப்பொழுது அவர் சொன்னார்.

“நான் ஒருவருடம் பைத்தியங்களோடு பைத்தியமாக வாழ்ந்தேன். அதில் கொஞ்சம் கூட சிரமம் தெரியவில்லை. ஆனால் நான் புத்தி தெளிந்த பிறகும் ஒரு வாரம் அவர்களோடு இருந்தேன். அந்த ஒருவாரம் தான் தான் எனக்கு ஒரு யுகமாகத் தெரிந்தது. அவ்வளவு கஷ்டம்” என்றார்.

அதனால் கூட்டத்திலிருந்து வேறுபட்டு வாழுவதென்பதில் கொஞ்சம் சிரமம் தான். பைத்தியங்களுக்கு மத்தியில் பைத்தியமாக இருந்து விடலாம். பைத்தியங்களுக்கு மத்தியில் புத்திசுவாதீனம் உள்ளவனாக இருப்பதற்கு மிகவும் சாமர்த்தியம் தேவைப்படுகிறது.

ஹிட்லர் ஒரு சமயம் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தார். மனநோயாளிகளையெல்லாம் வரிசையாக நிறுத்தி வைத்திருந்தார்கள். அவர் வந்தவுடன் எல்லோரும் “ஹிட்லர் வாழ்க” என்று கத்த வேண்டும் என்று அங்கேயுள்ள டாக்டர் சொல்லி வைத்திருந்தார்.

ஹிட்லர் வந்தார். சொல்லி வைத்தது மாதிரியே எல் லோரும் கத்தினார்கள். ஒருத்தர் மட்டும் கத்தாமல் அமை தியாக நின்று கொண்டிருந்தார்.

ஹிட்லர் அவரிடம் போய் “ஏன் நீங்கள் மட்டும் ஹிட்லர் வாழ்க என்று சொல்லாமல் நிற்கிறீர்கள்?” என்றார்.

அதற்கு அவர் மெதுவாக, “நான் பைத்தியக்காரன் இல்லை...” என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிளிநொச்சி உப மின்நிலையம் அமைக்கும் பணிகள் இரண்டு வருடத்தில் நிறைவடையும்

## அதன் பின்பு தான் அங்கு மின் விநியோகம் சீராகுமாம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உப மின் நிலையம் அமைக்கப்படும் வரை அங்கு சீரான மின் விநியோ கத்தை செய்வதில் பல சிக்கல்கள் உள்ளது என இலங்கை மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வரும் கிளிநொச்சி உப மின் நிலையம் அமைக்கும் பணிகள் இரண்டு வருடத்தில் பூர்த்தியாகும் எனவும் அவர் தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்ட மின் விநியோகத்தில் ஏற்படும் தடங்கல்களால் அரச திணைக்களங்களின் கணனி மயப் படுத்தப்பட்ட பணிகள் தாமதமாவதாக தெரிவிக்கப்படுவது தொடர் பாக கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மின்சார சபையின் லக்சபான மின்விநியோகம் வவுனியாவிலிருந்து கிளிநொச்சி-பரந்தன் வரை வழங்கப்பட்டுள்ளது.

இவ்விநியோகத்திற்காக வவுனியாவிலிருந்து 132ஆயிரம் வோல்டேஜ் மின்சாரம் மின்கம்பி மூலம் பரந்தன் வரை விநியோகிக்கப்படுகிறது.

இதன் போது மின்கம்ப மின் கடத்திகளில் மண் துகள்கள் படர்வதால் மின் விநியோகத்தில் தடைகள் ஏற்படுகிறது.

இதற்குப் பிரதான காரணம் வடமாகாணத்தின் காலநிலையே ஆகும். இலங்கையின் காலநிலையில் அடிக்கடி ஏற்படும் மழைவீழ்ச்சி காரணமாக மின் கம்ப மின் கடத்தி களில் படரும் மண் துகள்கள் அகன்று விடுகிறது.

எனவே வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கு வழங்கப்படும் லக்ஸபான மின்சாரத்தை கிளிநொச்சி உப மின் நிலையத்தின் ஊடாக மாவட்டத்திற்கு விநியோகிக்கும் போது தான் ஏற்படும் தடை சீராகும் என அவர் குறிப்பிட்டார். (5)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(கைதடி)

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை கள் தொடர்பாக கடந்த 23,24 ஆம் திகதிகளில் கைதடி பகுதியில் ஒலி பெருக்கி மூலம் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

பரவிவரும் டெங்கு நோயினால் இப் பகுதியில் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளதையடுத்தே அதன் ஒரு கட்டமாக இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுஎன்பதுகுறிப்பிடத்தக்கது. (6-2)

## உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிகள் தொடர்பான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். வணிகர் கழகம், வரியிறுப்பாளர்கள், கணக்காய்வு நிறுவனங்கள் ஆகியவற்றின் வேண்டு கோளுக்கு இணங்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் இன்று திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆகவே வர்த்தகர்கள், வங்கியாளர்கள், பட்டயக் கணக்காளர்கள், வரி செலுத்துபவர்கள் உட்பட சகல துறையைச் சார்ந்தவர்களையும் இக்கருத்தரங்கில் கலந்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும் இக்கருத்தரங்கில் பங்கு பற்றுவதன் மூலம் வருமானவரி, மொத்த விற்பனை வரி (B.T.T), முத்திரைவரி, தடுத்து வைத்தல் வரி (W.H.T) பொருளாதார சேவைகள் கட்டணம் (E.S.C), பெறுமதி சேர்வரி (V.A.T), தேசத்தை கட்டியெழுப்புதல் வரி (N.B.T) தொடர்பான தெளிவான விளக்கங்களை பெற்றுக் கொள்ள முடியும் என உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ்ப் பாண பிராந்திய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (6-4)

## இராசி பலன்

26.07.2010
(ஆடி 10, திங்கட்கிழமை)
பூரணை முற்பகல் 7.25 மணிவரை
உத்தராடம் முற்பகல் 10.01 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை, தொழில் ஆர்வம், நல்ல செய்தி. |
| இடபம் | தந்தை வழி உறவு, கட்டுப்பாடு, முயற்சி பலிதம், பிரயாண நன்மை. |
| மிதுனம் | எதிர்பாராத பகை, காரியதாமதம், உடல்நலக்குறைவு, போசனசுகம். |
| கடகம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, உறவினர் வருகை, தேகநலன், தனவருவாய். |
| சிங்கம் | சுவாரஸ்யம், செய்தொழில் முன்னேற்றம், தேகநலன், பொருள் சேர்க்கை. |
| கன்னி | வியாபார நன்மை, குடும்பக் கவலை, தனவிரயம், அறிஞர்கள் சந்திப்பு. |
| துலாம் | மாதா சுகம், நிலைமாற்றம், சுப செலவு, கல்வியில் ஆர்வம். |
| விருச்சிகம் | அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, தனவருவாய், காரிய நன்மை. |
| தனுசு | விவாதம், எடுத்தகாரியம் தாமதமாகும், போசன சுகக்குறைவு தனவிரயம். |
| மகரம் | தன்னம்பிக்கை, நல்ல முயற்சி போசன சுகம், நல்லசெய்தி. |
| கும்பம் | சுபசெலவு, உடல்நலம், பிரயாணம், உறவினர் சந்தப்பு. |
| மீனம் | குடும்ப சுகம், காரிய நன்மை, கீர்த்தி, விருந்துபசாரம். |

வளவன்



## பேசும் படம்



புத்தகம் பிடிக்கும் கைகளால்... காட்சி-ஓட்டுமடம்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 120 |
| தக்காளி | 70 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 120 | 120 | 100 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 30 | 50 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 50 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 90 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 60 |
| பயற்றங்காய் | 80 | 70 | 70 |
| லீக்ஸ் | 120 | 160 | 90 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 140 | 150 | 100 |
| போஞ்சி | 100 | 140 | 70 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |

யாழ்.கல்வி வலயத்தால் புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியில் நடத்தப்பட்ட தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கருத்தரங்கில் வளவாளராகக் கலந்துகொண்ட சி.நவகாந்தன் உரையாற்றுவதையும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், யாழ்.கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் கனகரத்தினம் மற்றும் வளவாளர்களான இ.கோகுலராகவன், மு.ஜெயமதன், மகேந்திரராசா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கருத்தரங்கில் பங்குபற்றிய மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

"ஆறுதல்" நிறுவனத்தின் முன்பள்ளி சிறுவர்களுக்கான கணித செயல் நூல் வெளியீட்டு விழா, 28 ஆம்திகதி பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில், யாழ். கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

மதிப்பீட்டுரையை, யாழ். கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி முதுநிலை விரிவுரையாளர் பா.தனபாலன் நிகழ்த்த முதற்பிரதியை யாழ். இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம் பெற்றுக்கொள்வார். (6-2)

## கேரதீவு -சங்குப்பிட்டி பாலம் அமைக்கும் பணிகள் வருட இறுதியில் நிறைவடையும்

(யாழ்ப்பாணம்)

கேரதீவு - சங்குப்பிட்டி பாலம் அமைக்கும் பணிகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நடைபெற்று வருவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரி ஒருவர் அறிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்மராட்சி கேரதீவு-சங்குப்பிட்டி பாலம் அமைக்கும் பணிகள் வீதி அபிவிருத்தி சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணிகள் எதிர்வரும் டிசம்பரில் முடிவடையும்.

அத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நாவற்குழி - கேரதீவு வீதி புனரமைப்புச் செய்யப்படவுள்ளது என அவர் குறிப்பிட்டார். (5)




## புனித சந்தனமாதா ஆலயத் திருவிழா

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள பாண்டியன்தாழ்வு புனித சந்தன மாதா ஆலயத் திருவிழா கடந்த 23 ஆம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தினமும் ஆலய வழிபாடு மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி அதைத் தொடர்ந்து திருப்பலியும் இடம் பெறுகிறது.

எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலி நடைபெறும். (2-51)

## மறைஞான சம்பந்தர் வித்தியாலயத்தை மீளவும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை

(காரைநகர்)

காரைநகர் தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாலயத்தை மீளவும் ஆரம்பிக்குமாறு தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்கம், தீவக வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரம் வருமாறு,

கடந்த 1990 ஆம் ஆண்டு தோப்புக்காடு கிராம மக்கள் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக, இடம்பெயர்ந்தபடியால், மேற்குறித்த பாடசாலை மூடப்பட்டது. அத்துடன் பாடசாலைக் கட்டடங்கள், தளபாடங்கள், மலசலகூடங்கள் என்பன சேதமாகியுள்ளது.

இப் பாடசாலை இயங்க முடியாதபடியால், இப்பகுதியில் மீளக்குடியேறிய மக்கள் தமது பிள்ளைகளை சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் கால்நடையாக வேறொரு பாடசாலைக்கு கல்வி பயிலுவதற்கு அனுப்பி வைப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் 42 மாணவர்கள் இவ்வாறு கால் நடையாகச் சென்று வருவது குறிப்பிடத்தக்கது.எனவே, இந்நிலையை மாற்றி 2011 ஆம் ஆண்டிலாவது இப்பாடசாலையை மீளவும் இயங்கவைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ளளது.

மேலும் இக்கோரிக்கையின் ஒருபிரதி காரைநகர் உதவி அரசாங்க அதிபரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (2-246)

## சட்டவிரோத மதுபான விற்பனையால் மக்கள் பெரிதும் பாதிப்பு

பொற்பதி,குடத்தனை ஆகிய இடங்களில் மக்கள் வாழ்விடங்களுக்கமைவாக, சில வீடுகளில் சட்டவிரோத மதுபானம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக இப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன் அடிக்கடி சண்டைகளும் இடம் பெறுகிறது. இவ்வாறான மதுபான சாலைகள் மக்கள் வாழ்விடத்திற்கு அண்மையில் காணப்படுவதால் இளம் வயதினர்களும் மேற்குறித்த இடத்திற்கு அடிக்கடி சென்றுவருவதை அவதானிக்கமுடிகிறது.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருத்திற்கொண்டு, சட்ட விரோத மதுபான விற்பனையை நிறுத்தி இப்பகுதி மக்களுக்கு உதவ முன் வர வேண்டுமென மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (2)

## காரைநகரில் மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு சுயதொழில் உதவிகள்

(காரைநகர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம்பெயர்ந்து தற்போது மீளக் குடியேறியுள்ள 25குடும்பங்களுக்கு கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் சுயதொழில் மேம்பாட்டிற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

அண்மையில் நடந்த போர் காரணமாக, வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக் குடியேறிய 25 குடும்பங்களுக்கு சுய தொழில் மேம்பாட்டிற்காக நல்லின ஆடுகளும் , இவ் ஆடுகள் வளர்ப்பதற்குரிய 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கூரைத் தகடுகளும், உபகரணங்களும் கிராம எழுச்சித் திட்ட 2010 இற்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.(2-246)

## நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம ஆலய வருடாந்த ஆடிவேல் வீதியுலா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தான ஆடிவேல் விழா நாளை செவ்வாய்க்கிழமை முதல் 29 ஆம்திகதி வியாழக்கிழமை வரை மூன்று தினங்கள் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஊர்வலம் ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி வழியாக நண்பகல் 11 மணிக்கு வீரமாகாளி அம்மன் ஆலயத்தைச் சென்றடையும். அங்கிருந்து 2மணிக்கு ஆரம்பமாகி யாழ்.நகரின் அனைத்து வீதியூடாகவும் சென்று மாலை 6.30 மணிக்கு வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலைச் சென்றடையவுள்ளது.

தொடர்ந்து நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு காங்கேசன்துறை வீதி வழியாக பகல் 12 மணிக்கு வண்ணை நாச்சிமார் அம்மன் ஆலயத்தை வந்தடையும். அங்கிருந்து 4 மணிக்கு புறப்பட்டு மாலை 6.30 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தை வந்தடையும்.

29 ஆம்திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு திருநெல்வேலி வழியாக அரசடி சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்தை பகல் 12 மணிக்கு வந்தடையும். மாலை 4.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கல்வியங்காடு ஊடாக மாலை 7 மணிக்கு ஆலயத்தை வந்தடையவுள்ளது. (6-4)

## குறிகட்டுவான் -நெடுந்தீவு போக்குவரத்திற்கு 20 மில்லியன் ரூபாய் செலவில் புதிய படகு

(யாழ்ப்பாணம்)

தீவகம் குறிகட்டுவான் -நெடுந்தீவு போக்குவரத்துக்கென 150 பயணிகள் பயணிக்கக் கூடிய புதிய படகு எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளது.

இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தகவல் தருகையில்,

குறிகட்டுவான் -நெடுந்தீவு போக்குவரத்துக்கென புதிய படகு ஒன்று 80 மில்லியன் ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது.

இப் புதிய படகு அமைக்கும் பணிகள் கொழும்பு டொக்கியார்ட் (DOCKYARD) நிறுவனத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் 150 பயணிகள் பயணம் மேற்கொள்ளக் கூடிய வகையில் அமைக்கப்படும் இப்புதிய படகு எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் சேவையில் ஈடுபடுத்தப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (5)

# போலி ஆவணம் தயாரிக்கும் நிலையம் சுற்றிவளைப்பு

(கொழும்பு)

போலி ஆவணங்களை தயாரித்து நபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் நிலையமொன்றை நடத்தி வந்த பெண் ஒருவர் உட்பட இருவர் சிலாபம் சிங்கபுரம் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய இந்த நிலையம் சுற்றி வளைக்கப்பட்டது. போலி ஆவணம் தயாரிக்கும் நிலையத்தை நடத்தி சென்றதாக கூறப்படும் பெண்ணின் கணவனையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். எனினும் அவர் ஏற்கனவே வெளிநாடு ஒன்றுக்கு தப்பிச் சென்றுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள் ளது.

இதேவேளை வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போலி ஆவணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளர்.

சிலாபம் தலைமையக பொலிஸ் நிலை யத்தின் பெயரை குறிக்கும் வகையில் போலியாக தயாரிக்கப்பட்ட இறப்பர் முத்திரை ஒன்றையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். (6)

# ஐ.நா.நிபுணர் குழு இலங்கை செல்ல விசா அனுமதி எதனையும் கோரவில்லை

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழு இலங்கைக்கு விஜயம் செய்வது தொடர்பான விசா அனுமதி எதனையும் இதுவரையில் கோரவில்லை என சிரேஸ்ட அரசாங்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தோனேசியாவின் முன்னாள் சட்டமா அதிபர் டாரூஸ்மான் தலைமையிலான மூவர் அடங்கிய நிபுணர்கள் குழு இதுவரையில் உத்தியோக பூர்வமாக கூடி ஆராயவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு சென்று விசாரணைகளை மேற்கொள்வது தொடர்பில் நிபுணர்கள் குழு தீர்மானிக்கவில்லை எனவும் விசா விண்ணப்பங்கள் எதனையும் கோரவில்லை எனவும் நியூயோர்க்கிற்கான இலங்கை உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

விசா கோரி விண்ணப்பிக்கப்பட்டாலும் விசா வழங்கப்படமாட்டாது எனவும் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி இலங்கையும் ஐக்கிய நாடுகள் அமைப்பும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையின் அடிப்படையில் நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கைக்குச் செல்ல அனுமதி மறுக்கப்படுகின்றமை துரதிஸ்டவசமானதென நிபுணர்கள் குழுவின் தலைவர் டாரூஸ்மான் குறிப்பிட்டுள்ளார். அனுமதி மறுக்கப்படுவதால் உண்மையை கண்டறிவதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6-2)

# வீட்டின் பின்புற ஜன்னலை உடைத்து 25 பவுண் நகை திருட்டு

(கரவெட்டி)

அல்வாய் தெற்கில் வீட்டு உரிமையாளர்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த சமயம் பார்த்து ஜன்னலை உடைத்து உட்புகுந்த திருடர்கள் 25 பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 25 ஆம் திகதி அதிகாலை 2 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

அல்வாய் தெற்கைச் சேர்ந்த வல்லிபுரம் கந்தையா என்பவரது வீட்டில் உரிமையாளர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயம் பார்த்து வீட்டின் பின்புற ஜன்னலை உடைத்து திருடர்கள் உள்நுழைந்துள்ளனர். பின்னர் அங்கிருந்த 25 பவுண் தங்க நகைகளைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடமராட்சிப் பகுதியில் தொடர்ந்து இது போன்ற பல திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் இச் சம்பவங்கள் தொடர்பாக மக்கள் அச்சம் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-2-24)

# இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2011/2012ஆம் கல்வியாண்டுக்கான முயற்சியாண்மையும் சிறு வணிக முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறி(ESBM) ஆரம்பமாகவுள்ளது.

இக்கற்கை நெறிக்கான தகைமை, ஆகக்குறைந்தது க.பொ.த சாதா ரண தரத்தில் இரு தடவைகளிற்கு மேற் படாமல் ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத் தல் வேண்டும். மாணவர்கள் இவற்றுக்குரிய விண்ணப்பப்படிவங்களை விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் முன் யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாமென இணைப்பாளர் அறிவித்துள்ளதுடன் விண்ணப்ப முடிவுத் திகதி செப்ரெம்பர் மாதம் 06 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. (6-2)

☼ ☼ ☼

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறும் கல்வியியற் பீடம் சார் கற்கை நெறிகளுக்கு கல்விசார் வளவாளராக(கற்பித்தற்பயிற்சி மற்றும் மதிப் பீட்டுப்பணிகளில்) கடமையாற்றுவதற்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கல்வியியல் முதுதத்துவமாணி அல்லது கல்வியியற் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.விண்ணப்பிக்க விரும்புபவர்கள் சுயவிபரக் கோவையினை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ இணைப்பாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், யாழ்.பிராந்திய நிலையம், பிறவுண் வீதி ,கொக்குவில் என் னும் முகவரிக்கு அனுப்பி வைக் கும் படி பிராந்திய இணைப்பாளார் கேட்டுக் கொள்கின்றார்.

☼ ☼ ☼

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் பட்டமேல் விசேட தேவைகள் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்குரிய(Post Graduate Diploma in Special Needs Education) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாமெனவும் விண்ணப்ப முடிவுத் திகதி ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி என இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (6-2)

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் கனேசலிங்கம்



பொன்னையா லேன் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கணேசலிங்கம் அவர்கள் 21.07.2010 புதன்கிழமை அன்று காலமானார். அன்னார் காலம் சென்ற வல்லிபுரம் கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலம் சென்ற அரியகுட்டி விஜயலக்சுமி தம்பதியினரின் மருமகனும், சித்திராங்கதேவியின் அன்புக்கணவரும் பிரியங்கா, யுரேக்கா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி),துவாரகன்( யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும்,சந்தானலட்சுமி,யோகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும், திருச்சிற்றம்பலம், ரட்ணகுமார் (ஜேர்மனி) பகவதி, சுப்பிரமணியம், கனகரத்தினம் காலம் சென்ற தணிகாசலம், சாரதாதேவி (கனடா),குகனேசமலர், பரந்தாமன், காலம் சென்ற நிர்மலாதேவி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், நல்லநாதன்(கனடா), அருமத்துரை, துரைரட்ணம் (கனடா), குமரேஸ்வரி, இமாவதி (பனை அபிவிருத்திச் சபை) ஆகியோரின் உடன் பிறவாத சகோதரனும் திருசாந்தினி, காலம் சென்ற சபேசன், காலம் சென்ற ரஜனி (கனடா),கேதீசன் (அயர்லாந்து), ரமேஷன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் சுதாகரன் (கனடா), சுதாமதன்( பிரான்ஸ்), சுதர்சன்(கனடா), சுஜீவன் (கனடா), யதுர்சன் (கனடா), அனுராஜ், அயந்தா, கஜன்(கனடா) துசாந் (கனடா), தாரணி (கனடா) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (26.07.2010) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.
021-222-2486

தகவல்
குடும்பத்தினர்.

(C - 751)



கொக்குவில் பிரதேசத்தில் ஏழு கிராமசேவையாளர் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் நேற்று யாழ்.சிவில் அலுவலக இணைப்பாளர் பண்டார தலைமையில் நடைபெற்றது.இதில் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், இராணுவத்தினர் ஆகியோர் கலந்துகொண்டு சிரமதானத்தில் ஈடுபடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# கேள்வி நடைமுறைகளை மீறி மருந்துகள் கொள்வனவு

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

2008 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சினால் அவசர நடவடிக்கையாக கேள்வி அறிவித்தல் நடைமுறைகளை மீறி பெருந்தொகை மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறி சேன தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளில் அத்தியாவசியமான மற்றும் அத்தியாவசிய மற்ற மருந்துகள் போதியளவில் கையிருப்பில் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக தேவையான நிதி ஒதுக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும்போது உள்ளூர் சந்தையில் அவற்றைக் கொள்வனவு செய்வதை நியாயப்படுத்த முடியுமெனினும் அத்தியாவசியமற்ற மருந்துகளை அவ்வாறு கொள்வனவு செய்வதை தான் அங்கீகரிக்கவில்லை எனவும் கொள்வனவு களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை முறையாக நிர்வகிக்குமாறு வைத்தியசாலைகளில் பணிப்பாளர்களுக்கு தாம் உத்தரவிட்டுள்ளதாகவும் மருந்துகள் கொள்வனவுக்கு அரசாங்கம் போதியநிதி ஒதுக்கியுள்ள நிலையில் தட்டுப்பாடுகள் ஏற்படும் போது அதற்கு மேற்படி அதிகாரி களே பொறுப்பாளிகள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

# பகுதிநேர தொழில்களில் ஈடுபடும் கனிஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள்

(கொழும்பு)

கனிஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் பகுதி நேர தொழில்களில் ஈடுபட்டு வருவதாக செய்தி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. தமது கடமை நேரத்தின் பின்னர் வேறு தொழில்களில் ஈடுபட்டு வருமானத்தை ஈட்டி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கனிஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மிகவும் சொற்ப அளவு சம்பளமே வழங்கப்படுவதனால், இவ்வாறு அவர்கள் பகுதிநேர தொழில்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


பொலிஸ் உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதோடு, கனிஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் வேறு சாதாரண சிறு தொழில்களில் ஈடுபட்டு வருவதனால் பொலிஸாரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படக்கூடுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடைநிலை பொலிஸ் உத்தியோகத்தர்கள் முச்சக்கர வண்டி சாரதிகளாகவும், தனியாரர் நிறுவனங்களில் பாதுகாப்பு உத்தியோத்தர்களாகவும் செல்வந்த வர்த்தகர்களின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாகவும் மற்றும் விவசாயம் போன்ற தொழில்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போதியளவு சம்பளம் கிடைக்காத காரணத்தினால் தாம் இவ்வாறு வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவதாக கனிஷ்மட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர். (6-2)

# உலகப் புகழ்பெற்ற மோனலிசா ஓவிய புன்னகையின் ரகசியம் என்ன?

## விஞ்ஞானிகள் ஆய்வு



(பாரீஸ்)

மோனலிசா ஓவியம், எப்போதும் புத்தம் புதிய பொலிவுடன் காட்சியளிக்க என்ன காரணமென்பது குறித்து, பிரெஞ்சு விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

உலகப் புகழ்பெற்ற ஓவியர் லியானோர்டா டாவின்சி வரைந்த மோனலிசா ஓவியமும், அதன் மர்ம புன்னகையும் உலகப் புகழ் பெற்றது.மேலும், அந்த ஓவியத்தில் மிக நுணுக்கமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள வண்ணக் கலவையால், அந்த ஓவியம் உயிரோட்டமுள்ளதாக விளங்கு கிறது.

அதில் பல அடுக்குகளாக வண்ணக் கலவைகள் எந்த விதத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது குறித்து, பிரெஞ்சு விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றர். எக்ஸ்-ரே, ஸ்கேனர்,சோலார், லேசர் உள்ளிட்டவற்றைக் கொண்டு, அந்த ஓவியத்தின் ஒவ்வொரு அடுக்கையும் ஆய்வு செய்து வருகின்றனர்.

இதுகுறித்து அவர்கள் கூறியதாவது, மோனலிசா ஓவியத்தின் உயிரோட்டம் மற்றும் அதன் கண்ணாடி போன்ற பளபளப்புக்குக் காரணம். அதில் பல அடுக்குகளாக வண்ணக் கலவைகள் பயன்படுத் தப்பட்டிரு ப்பது தான். இதில், 12 அடுக்குக ளாக வண் ணக் கலவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு அடுக்கும் ஒன்று அல்லது இரண்டு மைக்ரோ மீற்றர் தடிப்பு உடையது. இதன் மூலம் தான் அந்த ஓவியத்திற்கு பளபளப்பு இருப்பதுடன், புகைப்படம் போன்றும் தோற்றமளிக்கிறது.

இதேபோன்று ஓவியம் வரைய பலகால கட்டங்களில் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், அது கைகூடவில்லை. காரணம், டாவின்சியின் ஓவிய நுட்பம் மிக நுணுக்கமாக அமைந்திருப்பதுதான். டாவின்சியின் காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஓவிய நுட்பங்களைக் கண்டறிவதன் மூலம், தற்கால ஓவியக் கலைக்கு சிறப்பு சேர்க்க முடியும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். (6)

# வல்வை- தெல்லிப்பளை- அராலி வீதி விரைவில் புனரமைக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வல்வை- தெல்லிப்பழை - அராலி பிரதானவீதி விரைவில் புனரமைக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழுள்ள யாழ். பருத்தித்துறை வீதி, யாழ்.-பலாலி வீதி, யாழ். காங்கேசன்துறைவீதி, புத்தூர் -மீசாலைவீதி, யாழ் - கண்டி ஏ-9 வீதி என்பன அகலமாக்கி புனரமைக்கப்படவுள்ளது.

அத்துடன் வல்வை -தெல்லிப்பழை- அராலி பிரதான வீதியும் விரைவில் புனரமைக்கப்படவுள்ளது.

இவ் வீதிப் புனரமைப்புப் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிதி மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது. (5)


# சிறுவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள்

சிறுவர் உதவிச் சேவை (Child line) விசேட தொலைபேசி இலக்கத்திற்கு இது வரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

119 என்ற அவசர அழைப்புப் பிரிவு தொலைபேசி இலக்கத்தைப் போன்று 1929 என்ற சிறுவர் உதவி சேவை விசேட தொலைபேசி இலக்கத்திற்கும் முக்கியத்துவம் அளிக்குமாறு தேசிய சிறுவர் சேவை பாதுகாப்பு அதிகாரசபை வேண்டுகோள் விடுத்துள்ளது.


இதுதொடர்பாக பொலிஸ்மா அதிபரிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)




காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலய க.பொ.த (உ/த) மாணவர் மன்ற ஒன்றுகூடல் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட தொழிலதிபர் இ.ஜெயராஜா, காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன், யாழ்ற்றரன் கல்லூரி அதிபர் அ.சோமசேகரம் ஆகியோர் மலர் மாலை அணிவித்து வரவேற்கப் படுவதையும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் உரையாற்றுவதையும் அருகில் வித்தியாலய அதிபர் பொ.சிவானந்தராஜா உட்பட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)





கோப்பாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலையில் விளையாட்டு உபகரணங்கள் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் அருட்திரு எவ்.எல்.என். குரூஸ் அடிகளார் மங்கல விளக்கேற்றுவதையும் பாடசாலை மாணவர்கள் விளையாட்டில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- நல்லூர் நிருபர்)

# நாம் தமிழர் கட்சியின் மீது வழக்குப் பதிவு

(தூத்துக்குடி)

இலங்கை தமிழர் பிரச்சினை மற்றும் தமிழக மீனவர்கள் சிங்கள கடற்படையால் கொல்லப்படுவது தொடர்பாக இலங்கை ஜனாதி பதி ராஜபக்ஷவை வாழ்த்தியும் மத்திய அரசு காங்.தலைவர் சோனியா, முதல்வர் கருணாநிதியை விமர்சித்தும் நாம் தமிழர் கட்சியினர் சார்பில் திருச்செந்தூரின் பல பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

அது குறித்து வி.ஓ.ஏ.பாலசுப்பிரமணியம் பொலிஸ் புகார் செய்தார். அதனடிப்படையில் தூத்துக்குடி மாவட்ட நாம் தமிழர் கட்சியினர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. (6)

# பொலிஸ்மா அதிபருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

(கொழும்பு)

உயர் நீதிமன்றம் விடுத்த உத்தரவை அமுல்படுத்தத் தவறியதால் பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவுக்கு எதிராக பொலிஸ் அத்தியட்சகர் ஜே.ஆர்.ஜெயவர்தன தொடுத்த வழக்கு நாளை மறுதினம் புதன் கிழமை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

சட்டத்தரணி கௌரி சங்கரி தவராஜாவுக் கூடாக மேற்படி பொலிஸ் அத்தியட்சகர் சமர்ப்பித்த மனுவில் தனக்கு வழங்கப்பட்ட கட்டாய விடுமுறை உத்தரவை தற்காலிகமாக இரத்துச் செய்யுமாறு உயர்நீதிமன்றம் மே மாதம் 25 ஆம் திகதி உத்தரவிட்ட போதிலும் பொலிஸ் மா அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது தொடர்பான அறிவித்தல்களை விடுக்கவில்லை எனவும் தனது உத்தியோக பூர்வ வாகனம் மற்றும் சீருடைகளை மீள வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்றம் விடுத்த உத்தரவை பொலிஸ் மா அதிபர் வேண்டுமென்றே புறக்கணித்து வருவதாகவும் இதன்மூலம் அவர் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாகவும் பொலிஸ் அத்தியட்சகர் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். (6)

# லண்டனில் இடம்பெற்ற விபத்தில் இலங்கைத்தமிழர் உயிரிழப்பு

(கொழும்பு)

பிரித்தானியாவில் இடம்பெற்ற வீதி விபத்தில் இலங்கைத் தமிழர் ஒருவர் உயிரிழந்தார். லண்டனில் கடந்த செவ்வாய்க் கிழமை காலை 6.20 மணியளவில் இந்தச் சம்வம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் மிதிவண்டியில் பத்திரிகை விநியோகம் செய்து கொண்டிருந்த போது வாகனம் ஒன்று மோதியதனால் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் இராஜேந்திரன் இராமகிருஷ்ணன் (வயது 35) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தலையில் பலத்த காயங்களிற்குள்ளாகி லண்டன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பின்னர் மாரடைப்பு ஏற்பட்டதனால் அவர் அங்கு மரணமானார்.

இவ்விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்த இராமகிருஸ்ணனின் மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் இலங்கையிலேயே வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-2)

# காணாமல் போன இலங்கைமாலுமி குறித்து விசேட விசாரணைகள்

(கொழும்பு)

இஸ்ரேல் வர்த்தக கப்பல் ஒன்றில் இருந்த போது காணாமல் போன இலங்கை மாலுமி தொடர்பாக அறிக்கை ஒன்றை வழங்குமாறு கப்பல் நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக அந்த நாட்டிலுள்ள இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கையில் காணாமல் போன வர்த்தகக் கப்பல் இஸ்ரேலை சென்றடைந்தும் விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவிக்கையில்,

காணாமல் போன இலங்கையர் தற்கொலை செய்து கொண்டிருக்கலாமென விசாரணைகளை மேற்கொள்ளும் நிறுவனம் சந்தேகம் வெளியிட்டுள்ளதாக தெரிவித்தார்.

கொழும்பில் இருந்த இஸ்ரேலுக்கு சென்று கொண்டிருந்த வர்த்தகக் கப்பலில் இருந்த இலங்கை மாலுமியே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இவருடன் மேலும் 3 இலங்கையர்கள் இந்த கப்பலில் பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தகவல்களை திரட்டி வருவதாக இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் மேலும் தெரிவித்தார். (6)

# வடபகுதி மக்களுக்கு மருந்தூட்டப்பட்ட நுளம்பு வலை

(கொழும்பு)

டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய்கள் பரவுவதை கட்டுப்படுத்தும் பொருட்டு வடபகுதி மக்களுக்கு மருந்தூட்டப்பட்ட நுளம்பு வலைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருட காலத்தை எல்லையாகக் கொண்டு இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வட பிராந்தியத்திலுள்ள மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ். மாவட்டங்களில் மலேரியா தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிராந்திய வைத்திய அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு இந்தத் திட்டத்திற்காக பெறப்படவுள்ளது.

முதற்கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஐயாயிரம் மருந்தூட்டப்பட்ட நுளம்பு வலைகளை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. (6)

# கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆயிரத்து 90 பேர் இன்று மீள் குடியேற்றம்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் ஒரு தொகுதி மக்கள் இன்று மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட மீள் குடியேற்ற பணிப்பாளர் ஏ. கேதீஸ்வரன் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கான மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் இன்று திங்கட்கிழமை காலை வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து ஊற்றுப்புலம், பாரதிபுரம், மலையாளபுரம், புதுமுறிப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 310 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 90 பேர் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

அவர்கள் இரண்டு தினங்கள் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து மீள் குடியேற்றத்துக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)


யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா

03-04-1911 இல் ஆரம்பிக்கப்பட்ட எமது கல்லூரி 03.04.2011 இல் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவிருக்கின்றது. இவ் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று பழைய மாணவர்கள், முன்னையநாள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் ஆவலாய் உள்ளனர். இவ் விழா சிறப்புற அமைவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தருவதோடு இவ் விழாவினை ஒட்டி வெளிவர இருக்கும் நூற்றாண்டு விழா மலரில் பிரசுரிக்க உகந்ததான விடய தானங்களையும் , பங்களிப்புக்களையும் உள்நாட்டிலும் வெளிநாட்டிம் வதியும் சகல பழைய மாணவர்களிடமிருந்தும் எதிர்பார்க்கின்றோம்.

அத்துடன் எமது கல்லூரியின் உதைபந்தாட்ட அணியில் அன்று முதல் இன்று வரை பங்கு பற்றிய சகல வீரர்களையும் கௌரவிக்க பாடசாலையின் பழைய மாணவர் ஒருவர் விரும்புவதால் வெளிநாட்டிலிருக்கும் வீரர்கள் உட்பட சகலரும் தமது விபரங்களை உடனடியாக எமக்கு தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

"உங்கள் ஆதரவே விழாவின் வெற்றி"

தொடர்புகளுக்கு :-
தொலைபேசி :- 021 222 3829
தொலைநகல் :- 021 222 3829
இணையத்தளம் :- www urumpirai hindu. com.
கடித முகவரி :- அதிபர்
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி
(C - 735)



உங்களை உணருங்கள் "ஜெய்குருதேவ்" அன்பில் மலருங்கள்






ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்
வாழும் கலை பயிற்சிகள்
இணுவிலில் மீண்டும் ஆரம்பமாகின்றது.
உடல் உள ஆரோக்கியத்துக்கான
- சுதர்சனக்கிரியா
- மூச்சுப்பயிற்சி
- தியானம்
- எளிய யோகா உள்ளடக்கியது.

அறிமுக உரை
இடம்:- இணுவில் கந்தசாமி கோவில் இளந்தொண்டர் சபை மண்டபம்,
காலம்:- இன்று 26.07.2010 (திங்கட்கிழமை)
நேரம்: மாலை 5.15 மணிக்கு
T.P.: 0777740593 (ஐ)







aat கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றன.



Advanced Diploma in Computer Hardware & Networking
3 Months
ASIAN COMPUTER EDUCATION
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088
230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-3213390



தமிழக திருவாடுதுறை ஆதீனத்தால் சிவநெறிப்புலவர் என பட்டமளித்து கௌரவிக்கப்பட்ட யாழ்.சைவபரிபாலன சபைத் தலைவர் த.சண்முகலிங்கன் தம்பதியரின் எண்பதாவது அகவை நிறைவை முன்னிட்டு நண்பர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# நிறைவேற்றதிகார பிரதமர் முறைமை தற்போதைக்கு அறிமுகப்படுத்தப்படமாட்டாது

## அரசாங்கத் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைக்கு நிறைவேற்று அதிகாரப் பிரதமர் முறைமை அறிமுகப்படுத்தப்பட மாட்டாது என அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டாம் தவணைக்காக ஜனாதிபதிப் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டதன்பின்னரே நிறைவேற்று அதிகாரப் பிரதமர் முறைமை அறிமுகப் படுத்தப்படுமெனவும் எவ்வாறெனினும் நிறைவேற்று பிரதமர் முறைமை தொடர்பான அரசியலமைப்பு திருத்தங்கள் அதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

நிறைவேற்று பிரதமருக்கு வழங்கக் கூடிய அதிகாரங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அல்லது அனைத்துக் கட்சிக்குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாம் தவணைக்காலத்தை பூர்த்தி செய்ததன் பின்னரே நிறைவேற்று பிரதமர் முறைமை நாட்டில் அறிமுகப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29 ஆம்திகதி வியாழக்கிழமை பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (4)

# 200 பேருடன் கனடா வரும் கப்பல் புலிகளால் இயக்கப்படுகின்றதாம்

## இலங்கை அரசு தீவிர பிரசாரம்

(கொழும்பு)

ஈழத் தமிழர்கள் உட்பட சுமார் 200 இற்கும் அதிகமானவர்களுடன் புறப்பட்டிருக்கும் தாய்லாந்து சரக்குக் கப்பலான எம்.சீ.சன் இன் கப்டனாக விநோத் என்பவர் செயற்படுகின்றார் என்று இலங்கை அரசு பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளது.

கனடாவுக்கான இலங்கைத் தூதரகம் மூலம் இப்பிரசாரப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் இலங்கை வெளி விவகார அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில் கனடாவுக்கான இலங்கைத் தூதுவர் சித்திராங்கனி வாகீஸ்வர கனேடிய வெளிவிவகார அமைச்சு, அந்நாட்டு அதிகாரிகள் ஆகியாருக்கு மத்தியில் இப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார்.

இக்கப்பலின் கப்டனாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான வினோத் என்பவர் செயற்படுகின்றார் என்றும் இலங்கையில் போர் முடிவுக்கு வந்து அமைதி நிலவி வரும் சூழ்நிலையில், இக்கப்பல் கண்டிப்பாக மனிதாபிமான அடிப்படையில் மக்களை ஏற்றிவந்த கப்பல் இல்லையென்றும்; சட்டவிரோதமான முறையில் கடத்தல் பணிகளுக்காகவே இந்தக் கப்பல் மக்களை ஏற்றி வந்துள்ளது என்று அவர் கனேடிய மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு பேட்டி வழங்கியும் உள்ளார்.

இதேநேரம் இக்கப்பல் கனடாவின் எல்லையை நெருங்கி விட்டது என்பதை அமெரிக்காவின் கடல்துறை பாதுகாப்பு அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ளனர். கனடா நாட்டு கடல் எல்லைக்குள் 12 மைல்களுக்கு அப்பால் சர்வதேச கடல்பகுதியில் அக்கப்பல் தென்பட்டிருக்கிறது என இந்த அதிகாரிகள் அடித்துக் கூறியுள்ளார்கள்.

ஆயினும் அக்கப்பல் தற்போது குறிப்பாக எங்கு உள்ளது? என்பதையும், அக்கப்பல் குறித்த மேலதிக தகவல்களையும் வெளிப்படுத்த அவர்கள் மறுத்துவிட்டனர். (6-2)

# பசில் ராஜபக்ஷ தலைமையிலான உயர்மட்ட குழுவினர் அடுத்தமாதம் இந்தியா விஜயம்

## முக்கிய விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் முக்கிய விடயங்கள் குறித்து விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று அடுத்தமாதம் புதுடெல்லிக்கு விஜயம் செய்ய உள்ளதாகவும் இரு தரப்பு உறவுகள், சர்வதேச விவகாரம் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இந்த விஜயத்தின் போது ஆராயப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் விஜயம் செய்ய உள்ளனர்.

தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வாறான தீர்வுத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பது குறித்து இலங்கை உயர்மட்ட இராஜதந்திரிகள் இந்திய அதிகாரிகளுக்கு விளக்கம் அளிக்கவுள்ளதுடன், இடம்பெயர் மக்கள் மீள்குடியேற்றம் ஏனைய புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து இந்திய அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்தப்பட உள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு தொடர்பிலும் இந்த சந்திப்பின்போது கலந்துரையாடப்படவுள்ளது.

ஓகஸ்ட் மாத நடுப்பகுதியளவில் இந்த விஜயம் நடைபெறலாம் என வெளிவிவகார அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் தற்போது ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ள அதேவேளை, பாதுகாப்புச் செயலாளர் அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ளார்.

பசில் ராஜபக்ஷ தலைமையிலான இதே இராஜதந்திர குழு கடந்த வருடம் டிசம்பர் மாதத்திலும் இந்தியாவிற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-2)

# ஜி.எஸ்.பி.வரிச்சலுகையினை ஈடுசெய்வதற்கான திட்டங்கள் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்த திட்டமிட்டுள்ள ஜி.எஸ்.பி .பிளஸ் வரிச்சலுகையை ஈடுசெய்வதற்கான திட்டங்கள் எதுவும் இலங்கை அரசிடம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக வரிச்சலுகையின் இழப்பை ஈடுசெய்வதற்கு இலங்கை அரசிடம் திட்டங்கள் எதுவும் இல்லை என அரசின் அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையின் இழப்பினால் பல இலட்சம் சிங்கள தொழிலாளர்கள் தொழிலை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு உதவிகளை வழங்கம் திட்டம் எதுவும் இலங்கை அரசிடம் இல்லை எனவும் தேசிய வர்த்தக சங்கத்தின் மையத்தின் பணிப்பாளர் வசந்தா சமரசிங்க தெரிவித்துள் ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வர்த்தக திணைக்களத்தின் பணிப்பாளரை நாம்கடந்த 20 ஆம்திகதி சந்தித்திருந்தோம்.அப்போது அவர் தம்மிடம் மாற்றுத் திட்டங்கள் எதுவும் இல்லை என எம்மிடம் தெரிவித்திருந்தார். தொழிற்சாலைகளின் முகாமையாளர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு கூட அரசிடம் திட்டங்கள் இல்லை.

ஜி.எஸ்.பி.பிளஸ் வர்த்தக வரிச்சலுகையின் இழப்பினால் 3 இலட்சம் தொழிலாளர்கள் தமது தொழில்வாய்ப்பை இழக் கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)





வைத்திய கலாநிதி ச.முருகானந்தனின் மணிவிழா ஞாபகார்த்தமாக "மல்லிகைப் பந்தல் அவர்கள் துணிந்து விட்டார்கள்" என்னும் மலையக சிறுகதை நூல் வெளியீட்டு விழா நிகழ்வில் பேராசிரியர் சந்திரசேகரன், நூலாசிரியர் ச.முருகானந்தன் ஆகியோர் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

# இலங்கைத் தமிழ் எம்.பி.க்களிடம் எகிறிய முதல்வர் கருணாநிதி

எதற்காக வருகிறார்கள்.... என்ன செய் தியைக் கொண்டு செல்கிறார்கள் .... மர்மம் தெரியவில்லை. ஆனால், மாதம் தோறும் ஏதாவது ஒரு நாள் திடீரென்று டில்லியில் முகாமிடும்



இலங்கைத் தமிழ் எம்.பி.க்கள்.... பிர தமர், வெளியுறவுத்துறை அமைச்சர், வெளியுறவுத்துறை செயலாளர்கள் எனப் பேச்சுவார்த்தைகள் நடத்தத் தவறுவது இல்லை. பலன்?

டில்லியில் இருந்து கொழும்பில் இறங்கும் போது தமிழ் எம்.பி. ஒருவருக்கு மூக்கில் சின்னக் கொப்பளம். பேண்டேஜ் போட்டிருந்தார். விமான நிலையத்தில் அவரைச் சந்தித்த பிரமுகர் ஒருவர் ஏதோ கேட்க, "இந்தியாவில் இருந்து மூக்குடைபட்டு வருகிறோம்" என்றாராம் அந்த எம்.பி. நிலைமை அப்படித் தான் இருக்கிறது!

இந்நிலையில், சம்பந்தன் தலைமையில் மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சுமந்திரன் ஆகிய ஐந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி - க்கள், கடந்த 20-ம் திகதி சென்னைக்கு வந்து முதல்வர் கருணாநிதியை சந்தித்தனர். ஒரு மாதத்துக்கு முன்பே நடந்திருக்க வேண்டிய நிகழ்வு இது.

முதல்வர் கொடுத்த தேநீர் இதமாக இருந்தாலும், இந்த சந்திப்பு சற்று சூடாகவே இருந் தது. ஈழத்தில் அரசியல் போராட்டம் முடிந்து ஆயுதப் போராட்டம் உச்சத்துக்குப் போய் மீண்டும் பூஜ்ஜியத்துக்கு வந்துள்ள



நிலையில்... செல்வநாயகம், அமிர்தலிங்கம் காலத்து சங் கதிகளை நினைவுகூர்ந்து வழக்கமாகச் சொல்லும் கருணாநிதி, இந்த சந்திப்பில் கறார் குரலை எழுப்ப... கூட்டமைப்பினர் அதை எதிர் பார்க்கவில்லை!

"இனத் துரோகி" பட்டம் சூட்டும் எதிர்க்கட்சி அரசியலுக்கு இடையில், கோபாலபுரத்தில் வெளிப்பட்ட வார்த்தைகள் கடுமையாகவும் உறுதியாகவும் வந்து விழுந்திருக்கின்றன. "நீங்கள் என்னைப்பற்றி என்ன நினைக்கிறீர் களோ... எனக்குத் தெரியாது. நான் இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவர் இல்லை. இந்திய இறை யாண்மைக்குக் கட்டுப்பட்ட, ஒரு மாநிலத்தின் முதலமைச்சர்.

நீங்கள் நினைப்பதை எல்லாம் நான் இங்கு பேசமுடியாது. தமிழர்களுக்காக என்னால் என்ன செய்ய முடியுமோ... அதைத் தான் செய்ய முடியும். இந்த நாடு ஒரு தலைவரை இழந்திருக்கிறது. பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் இந்த நாட்டை ஆட்சி செய்கிறார்கள். அவர்களின் உணர்வில் நான் குறுக்கிட முடியாது!" என்றபடி



கருணாநிதியுடன் இலங்கை எம்.பிக்கள் சந்திப்பு...

## எட்டி எட்டி உதைக்கும் காலை பற்றிப் பிடிப்பது தான் ஒரே வழி

தேர்ந்தெடுக்கப்பட்ட வார்த் தைகளைக் கோர்த்ததுபோல இருந்திருக்கின்றன, தமிழக முதல்வரின் வார்த்தைகள்.

"இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது, பார்த்தசாரதி நடுநிலையுள்ள பிரதிநிதியாக இலங்கைக்கு அனுப்பப்பட்டார். அதைப் போன்ற பிரதிநிதியாக ஒருவரை நான் அனுப்பி வைக்க பிரதமரைக் கேட்டுள்ளேன். அது

ஜூனியர் விகடன்

நிச்சயம் நடக்கும். நீங்கள் சாணக்கியத்துடன், சாதுர்யத்துடன் அரசியல் பண்ணுங்கள்!" என்றும் கூட்டமைப்பினரிடம் முதல்வர் கூறியிருக்கிறார்.

"புலிகள் இல்லை, போர் இல்லை. வேரோடு வீழ்ந்து கிடக்கும் வாழ்க்கையை மீட்க உலக சக்திகள் யாரோடும் உறவாட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இருக்கிறது. இந்தியா எம் மாதிரியான நடவடிக்கை எடுத்தாலும் நாங்கள் ஏற்கத் தயாராக இருக்கிறோம்! என்று இவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அந்த நம்பிக்கையை விட்டுவிடாதீர்கள்!" என்றாராம் முதல்வர்.

கொழும்புக்குப் புறப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜாவிடம் பேசினோம்.

முகாம்களில் அடைக்கப்பட்ட தமிழ் மக்கள் மீள் குடியேற்றப்பட்டு விட்டதாக இந்தியாவில் பிரசாரம் செய்யப்படுகிறது.

ஆனால்,போருக்கு முன்பு மக்கள் எங்கு வசித்தார்களோ,அங்கு மீள் குடியேற்றபட வில்லை.வவுனியா,யாழ்ப்பாண முகாம்களில் இருந்தவர்கள் அவரவர் ஊர்களுக்கு அருகில் மீண்டும் முகாம்களில் தான் வைக் கப்பட்டுள்ளார்கள்.

உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறி ,தமிழர்களின் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன் னார்,வவுனியா மாவட்டங்களில் 10ஆயிரம் ஏக்கர் தமிழர் மண்ணை அரசாங்கம் கையகப்படுத்தியுள்ளது.

இந்த இடங்களில் நிரந்தர இராணுவ முகாம்களும் ஒரு இலட்சம் இராணுவத்தினர் குடும்பத்துடன் தங்க வீடுகளும் அதிவேகமாக



அமைக்கப்படுகின்றன.

தமிழர் பகுதிகளில் நிர்வாகத்தை இராணுவமயம் ஆக்குவது ஓர் ஆபத்து. அதைவிட அபாயமானது, 10 இலட்சம் தமிழர்களின் பாரம் பரியப் பிரதேசமான வடக்கு, கிழக்கு மாகாணத்தில் நான்கு இலட்சம் சிங்களவர் குடியேற வுள்ளனர்.

ஏற்கெனவே, சிறுபான்மையினராக இருக்கும் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில், சிங்களவர்களைக் குடியேற்றி, தமிழர்களை மேலும்



சிறுபான்மையினர் ஆக்குவதுதான் அரசாங்கத்தின் திட்டமாகத் தெரிகிறது.

அதாவது, படிப்படியாக தமிழர்கள் நாடாளுமன்ற, மாகாண சபைகளுக்குத் தேர்வுசெய்யப்படு வது குறைந்து ஒருகட்டத்தில் சிங்களவர் மட்டுமே மக்கள் பிரதிநிகளாக ஆகும் நிலை ஏற் படும்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களை மீள் குடியேற்ற வேண்டிய அளவுக்கு இந்த அபாயத்தைத் தடுத்து நிறுத்துவதும் உடனடியாகச் செய்யப்பட வேண்டும். நாங்கள் ஜனநாயக அமைப்பு என்ற வகையில் இந்தியாவுடன் பேசியே ஆக வேண்டும். ராஜபக்ஷவை அழைத்துப் பேசிய டில்லி, எங்களையும் கூப்பிட்டுப் பேசி இருக்கிறது. இந்தியாவின் நிலைப்பாடுபற்றி எங்களிடம் திரும்பத் திரும்பக் கேட்கப்படுகிறது. எங்களைப் பொறுத்தவரை, நடுக்கடலிலே கைவிடப்பட்டு கட்டுமரம் கிடைக்காதா என்ற நிலையில் இருக்கிறோம்.

இந்திய அரசின் உதவியைக் கேட்பதில் எந்தத் தவறும் இல்லை. எங்கள் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் இதுதான். இந்திய அரசுடன் பேசுவது போலவே இலங்கை அரசுடனும் தொடர்ந்து பேசுங்கள்; அதே சமயம் உங்கள் நிலையை விட்டுக்கொடுக்க வேண்டாம் என்று டில்லி எங்களுக்குச் சொல்லியிருக்கிறது. இவற்றை முதல்வர் கருணாநிதியிடம் சொல் வதற்காகவே நாங்கள் சென்னை வந்தோம் என்றார் மாவை சேனாதிராசா.

எட்டி எட்டி உதைக்கிற காலைக்கூட இறுக்கமாகப் பற்றிக்கொள்வதைத்தவிர, எங்க ளுக்கு வேறு வழி இல்லை! என்று இலங்கைத் தமிழ்த் தலைவர் ஒருவர் சொல்வது தான் இன்றைய பரிதாபகரமான யதார்த்தம்!

இரா.தமிழ்க் கனல்


# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010


ஆசிரியர்:-ந.சந்திரகுமார்
மட்டக்களப்பு

## மாதிரி பரீட்சை-13
## வினாத்தாள் -I

நேரம்- 45 நிமிடம்

❋ ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைத் தரப்பட்டுள்ள மூன்று விடைகளிடையே தெரிந்தெடுத்து அதன் கீழ் கோடிடுக.

1.



2.



❋ ஒவ்வொரு கவிதையிலும் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.


3.
பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போல
கருமந் தொடங்கும் போது
.............. பார்க்க வேண்டும்


1. சகுனம் 2. நேரம் 3. காலம்

4.
ஈசன் நாமத்தை அனுதினம்
ஏத்திப் புகழ வேண்டும்
தாசதானாய்ப் பணிந்து
தருமம்...............வேண்டும்

1. செய்க 2.காக்க 3. போற்ற

❋ பின்வரும் கோலத்திற்கு ஏற்ப அடுத்து வரும் கோலத்தைக் கண்டு பிடியுங்கள்.

5.



6.




❋ பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

> கடந்த ஒரு மாத காலமாக பெற்றோரையும் சகோதரர்களையும் பிரிந்து, இந்த அறையினுள் வாழ்ந்து வருகின்றேன். இப்போது வானொலியும், தொலைக்காட்சியும் தான் எனது நண்பர்கள். தினமும் பல மணிநேரம் என் குடும்ப நிலையை எண்ணி கவலையடைகின்றேன். மீண்டும் எப்போது பெற்றோரைச் சந்திப்பேன் என ஏங்குகின்றேன்.

7. இப்பந்தியில் தன் சுயசரிதத்தையை கூறுபவர் யாது?
1.ஒரு மாணவன் 2. ஒரு மாணவி 3. எதுவும்கூறமுடியாது

8. இப்பந்தியில் குறிப்பிடுபவர் வாழுமிடம் எது?
1. ஒரு விடுதி 2. வெளிநாடு 3.எதுவும் கூறமுடியாது


9.சதுர வடிவான கடதாசி ஒன்றை முதலில் இரண்டாக மடித்து, பின் மீண்டும் ஒரு தடவை மடித்து பின் மூலைவிட்டதினூடாக மடித்து இரு துளைகள் இட்ட பின் கடதாசியை மீண்டும் விரித்தால் எத்தனை துளைகளைக் காணலாம்.?




1) 8 2) 16 3) 32

10. ஜது,மது, மாது, சது ஆகியோர் சிநேகிதிகள், இவர்கள் நான்கு பேரும் தங்கள் உயரங்களை ஒப்பிட்டுப் பார்த்தனர். இதில். ஜது மாதுவை விட உயரமானவனள் எனினும், சதுவை விட குள்ளமானவள் மாது, மதுவை விட உயரமானவள் ஆனால் ஜதுவை விட உயரம் குறைந்தவள் இந்த தகவலின் படி உண்மையான கூற்று எது?
1. மாது, ஜதுவை விட உயரமானவள்
2. மது எல்லோரிலும் உயரம் குறைந்தவள்
3. ஜது எல்லோரிலும் உயரமானவள்

11. 5 m நீளமும் 4 m அகலமும், 2m உயரமும் கொண்ட பெட்டி ஒன்றினுள் 2m நீளமும் 1m அகலமும், 1m உயரமும் கொண்ட எத்தனை பெட்டிகளை அடுக்கி வைக்கலாம்.





1.20 2. 25 3. 30

❋ 2012ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி திங்கட்கிழமையாகும்.

12. 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி என்ன கிழமை?
1.சனி 2. ஞாயிறு 3. திங்கள்

13.2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி என்ன கிழமை?
1.ஞாயிறு 2. திங்கள் 3. செவ்வாய்

❋ அமீனின் தாய், தந்தை, பாட்டன்,பாட்டி மற்றும் உறவினர்கள் பற்றிய கோட்டு வரிப்படம் தரப்பட்டுள்ளது.




14. கவி, அமீனைச் சந்திக்கும் போது என்ன உறவு முறை கூறி அழைப்பான்?
1. மச்சான் 2. அண்ணா 3. மாமா

15.அஜ்மி, ரவியைச் சந்திக்கும் போது, என்ன உறவு முறை கூறி அழைப்பான்?
1. மருமகன் 3. மாமா 4. சித்தப்பா

❋ பின்வரும் உருக்களுக்கு இடையிலான தொடர்பை கண்டு பிடியுங்கள்.

△ + □ = 65

○ + △ = 75

△ + ○ + □ = 105

16. ○ − △ இன் பெறுமதி யாது?

1. 15 2. 10 3. 5

17. ○ + □ இன் பெறுமதி யாது?


1. 65 2. 70 3. 75

18. 8 □ 8 □ 4 = 16 எனும் கணிதச் செய்கையில் பெட்டியினுள் வர வேண்டிய கணிதக்குறியீடுகள் முறையே எது?

1) +, + 2) ÷ , × 3) ×, ÷

19. நகரமொன்றில் 22 பாடசாலைகள் உள்ளன. அதில் 14 பாடசாலைகளில் ஆண்களும், 15 பாடசாலைகளில் பெண்களும் கல்வி கற்கின்றனர். எனினும் சில பாடசாலைகளில் ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் கல்வி கற்கின்றனர். இதில் பெண் பிள்ளைகள் மட்டும் கற்கும் பாடசாலைகள் எத்தனை
1. 7 2. 8 3. 15


விளையாட்டு மைதானமொன்றில் மூன்று சதுர வடிவான பாதைகளைக் காட்டும் வரிப்படம் தரப்பட்டுள்ளது. இதில் ஒரு சதுரத்தின் ஒரு பக்க நீளம் 1 சென்ரிமீற்றராகும் 1 சென்ரிமீற்றரினால் 10 மீற்றர் தூரம் காட்டப்பட்டுள்ளது.




20. A என்ற இடத்திலிருந்து S என்ற இடத்திற்குக் மிகக் குறைந்த தூரத்தில் செல்லும் பாதையின் நீளம் யாது?
1. 240m 2. 260m 3. 270m

21. A என்ற இடத்திலிருந்து R,C,G,I,L,K,R,Q ஊடாக S வரை செல்லும் போது சென்ற தூரம் எவ்வளவு?
1. 340m 2. 320m 3. 300m

22. உருவிலுள்ள பொருட்களுடன் தொடர்புடைய செயல்களை முறையே காட்டும் விடை





1. வாசித்தல், அணிதல், தொடர்பாடல்
2. அடித்தால்,அழகு,கதைத்தல்
3. வாசித்தல், அணிதல், உரையாடுதல்

23. ஒரு வகுப்பிலுள்ள சில மாணவர்கள் ஒவ்வொருவரும் பொங்கல் வாழ்த்து அட்டைகளை ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக் கொள்வர். ஒரு வருடத்தில் இவர்களிடையே பரிமாறிக்கொண்ட வாழ்த்து மடல்கள் 72 எனில், வாழ்த்து மடல்களை பரிமாறிக்கொண்ட மாணவர்கள் எத்தனை?
1. 9 2. 8 3. 7


24. சமல், கமல், விமல் ஆகிய மூவரும் நண்பர்கள். இவர்களில் சமல், கமலுக்கு முன்னரே பூங்காவுக்கு வந்து, விமலுக்கு பின்னரே சென்றான். ஆனால் கமல், விமலுக்கு பின்னரே வந்து சமலுக்கு முன்னரே சென்றுவிட்டான். இதில் பூங்காவில் குறைந்தளவு
1. சமல் 2. கமல் 3. விமல்

25. அருகிலுள்ள தொடர்வை அவதானித்து விடை தருக.




இதில்  ஐ நிரப்புவதற்கு  இப்பாத்திரத்தால் எத்தனை தடவைகள் நீர் ஊற்ற வேண்டும்?
1.11 2. 22 3. 27

26. அருகிலுள்ள பாத்திரத்தின் கொள்வனவு ஆயிரம் லீற்றர்கள் ஆகும். இதனுள் 200 லீற்றர் நீர் உள்ளது. இதனை நிரப்புவதற்கு ஒரு குழாய் மூலம் நிமிடத்திற்கு 10 லீற்றர் நீர் ஊற்றப்படுகின்றது. எனில், இப்பாத்திரம் எவ்வளவு நிமிடத்தின் பின்னர் நிரம்பும்?





1. 110 நிமிடங்கள் 2. 90 நிமிடங்கள்
3. 80 நிமிடங்கள்.

27.




ஒருவர் A என்ற இடத்தில் இருந்து B என்ற இடத்திற்குச் சென்ற பாதையை அருகிலுள்ள வரிப்படம் காட்டுகிறது. இதில் இவர் எத்தனை தடவைகள் முறையே வலது புறமும், இடது புறமும் திரும்பியுள்ளார்.,
1. 8,3 2. 7,4 3. 4,7

28. சதுரக் கட்டத்தாளின் ஒரு கட்டமொன்றின் நீளம் 3 சென்ரிமீற்றர்களாகும் உருவில் நிழற்றப்பட்டுள்ள உருவின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்களாகும்?




1. 48 2.88 3.108


29. ஒரு நகரத்தில் பாடசாலை நூலகத்திலிருந்து 100 மீற்றர் கிழக்கேயும், பூங்கா, நூலகத்திலிருந்து 120 மீற்றர் தெற்கேயும் தேவாலயம் பூங்காவிலிருந்து 100 மீற்றர் கிழக்கேயும் உள்ளது. இதற்கேற்ப பாடசாலை தேவாலயத்திலிருந்து
1. 100மீற்றர் தெற்கே உள்ளது 2.120 மீற்றர் தெற்கே உள்ளது.
3.100 மீற்றர் மேற்கே உள்ளது.

30. | 6 | 0 | / | 3 | 1 |


அருகில் தரப்பட்டுள்ள நான்கு இலக்கங்களையும் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய மிகச் சிறிய எண்ணை, வகை குறிக்கும் எண்சட்டம் எது?




31. அருகில் தரப்பட்டுள்ள சதுரக்கோட்டுப்படத்தில் நிழற்றப்பட்ட கட்டடங்களின் பரப்பளவு, மொத்தப் பரப்பளவின் தசம எண் யாது?
1. 0.8 2. 0.4. 3.0.2



32.



அருகிலுள்ள உருளைனள வடிவான மரக்குற்றியை நடுவினூடாக பிளக்கும் போது ,ஒரு பாதியில் காணப்படும் நேரான விளிம்புகள் எத்தனை
1.2 2.4. 3. 6

33. ஒருவா தன்னிடமிருந்த பணத்தில் கால் பங்கை தம்பிக்குக் கொடுத்தார். மிகுதிப பணத்தை மூன்று சம பகுதியாகப் பிரித்து இரு பங்கை தங்கைக்கு கொடுத்தார். அவரிடம் மிகுதியாக இருந்த பணத்தில் ரூபா 50 க்கும் புத்தகமொன்றை வாங்கிய பின்னர் அவரிடம் ரூபா 25 மிகுதியாக இருந்தது. எனில், அவரிடம் இருந்த பணத்தொகை எவ்வளவு?
1. ரூபார 200 2. ரூபா 250 3. ரூபா 300


பின்வரும் கூற்றுக்கள் பற்றிய கருத்தை கண்டுபிடியுங்கள்

34. பின்வருனவற்றில் எப்போதும் உண்மையான கூற்று எது?
1. ஜனவரி முதலாம் திகதி தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும்
2. தொடருந்து தண்டவாளங்களில் பயணிக்கும்
3. பௌர்ணமி தினத்தில் சந்திரன் மேற்கே உதித்து கிழக்கே மறையும்


35. தினை விதைப்பவன் தினை அறுப்பான் வினை விதைப்பவன் வினையறுப்பான் என்பது பற்றி யாது கூறலாம்.
1. எப்போதும் உண்மையாகும் 2. பெரும்பாலும் உண்மையாகும்
3. சிலவேளை உண்மையாகும்

36. நிசாரிடம் உள்ள பணத்தொகை, பாலாவிடமுள்ள பணத்தொகையின் மூன்று மடங்காகும். நிசார் பாலாவுக்கு ரூபா 25 கொடுத்தால் இருவரிடமும் உள்ள பணத்தொகை சமமாகும். எனில், இருவரிடமும் உள்ள மொத்த பணத்தொகை எவ்வளவு?
1. ரூபா 25 2. ரூபா 75 3. ரூபா 100

37. விகடகவி என்பதை உருக்களைப் பயன்படுத்தி எழுதும் விதம் எது?





38.



அருகிலுள்ள உருவை A திசையில் இருந்து பார்க்கும் போது தோன்றும் விதம் யாது?

39. அருகில் தரப்பட்டுள்ள சதுரமுகியை அமைக்க மிகப் பொருத்தமான வெட்டுரு எது?




40. கொழும்பிலிருந்து பேரூந்து ஒன்றின் பயண நேர அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| பயண முடிவிடம் | புறப்படவுள்ள நேரம் | | வேறு குறிப்பு |
|---|---|---|---|
| | மு.ப | பி.ப | |
| * மாத்தறை | 11.30 | | |
| * கண்டி | | 1.00 | 30 நிமிடம் தாமதம். |
| * வவுனியா | | 1.15 | |
| * திருமலை | | 3.00 | இரத்துச் செய்யப்பட்டது |
| * யாழ்நகர் | 9.00 | | |

பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து புறப்பட்டுச் சென்ற ஒழுங்கு முறையை மிகச் சரியாகக் காட்டும் விடை தருக?
1. யாழ்நகர், கண்டி,வவுனியா, மாத்தறை,
2. யாழ்நகர்,மாத்தறை,வவுனியா, கண்டி
3. யாழ்நகர்,மாத்தறை,கண்டி, வவுனியா

# வள்ளுவர் கண்ட ஒப்புரவு 3


## ஒரு புதிய தத்துவம்

### செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

பேராசிரியர்
கா.மீனாட்சிசுந்தரனார்

வள்ளுவர், "நயனுடை யான் நல்கூர்ந்தானாதல் செயுநீர செய்யாது அமைகலா ஆறு" என எடுத்துக் காட்டுறார்.

தான் அனுபவிக்க வேண்டியதைத் தன்னால் அனுபவிக்க இயலவில்லையே என்பதை நல்ல பண்பாளன் வறுமையாக நினைப்பதும் இல்லை.ஆனால் பிறருக்கு உதவி அவர்களின் துன்பத்தை நீக்க இயலவில்லை என்பதையே அவன் வறுமையாகக் கருதுவான் என்கிறார் வள்ளுவர். கணவன் தன்னைவிட்டுப் பிரிந்து போய் . தனக்கு



மகிழ்ச்சி தராமல் துன்பம் தருகிறானே என்பது கண்ணகிக்கு வருத்தமாய்த் தெரிய வில்லை. கணவன் தன்னுடன் இன்மையால் ஒப்புரவு செய்ய இயலவில்லையே என வருந்துவதை நாமறிவோம். எனவே தனக்கு வரும் துன்பத்தைப் பற்றிச் சிறிதும் எண்ணாமல் பிறர் துன்பத்தை நீக்க இயலாத நிலையில் இருப்பதே வறுமையாகும் என நினைப்பது உயரிய நெறியாகும். "தன்துயர் காணாத் தகையால் பூங்கொடி," எனக் கவுந்தியடிகள் கண்ணகியைப் பாராட்டுகிறார் அன்றோ? கோவலன், தன் மகள் மணிமேகலைக்குப் பெயர் சூட்டும் நாளில் ஒரு துயரக் காட்சியைக் காண்கிறான். ஒரு வயது முதிர்ந்த கிழவனை ஒரு யானை தும்பிக்கையால் பிடித்துத் துன்புறுத்தியது கண்டு கொதித்தெழுந்து, ஓடோடிப் போய்த் தன் உயிரைப் பற்றிச் சிறிதும் எண்ணாமல் அவனை விடுவிக்க முயன்றமை ஒப்புரவுப் பண்பினாலன்றோ? பொய்க் காரியாளனுக்குப் பதிலாகக் கோவலன் தன்னுயிரைத் தர நினைப்பது எப்பண்பால்? இவ்வாறு மக்கள் ஒவ்வொருவரும் தன் துயர் காணாமல் பிறர் துன்பம் கண்டு அதைப் போக்காமையே வறுமை என நினைத்து அவ் வறுமையைப் போக்க நினைந்து விடுவார்களானால் சமுதாயம் எவ்வளவு உயர்ந்துவிடும்! அரசு சமுதாயத்திற்கு உதவுகிறது. அவ்வாறிருக்க நாம் ஏன் செய்யவேண்டும் எனத்தோன்றலாம். சட்டங்கள் அச்சத்தால் மனிதனை சீராக்க முயல்கின்றனர். அது முழு வெற்றி பெறுவதில்லை. ஆனால் மனத்தால் ஒவ்வொருவரும் ஒப்புரவுப் பண்பைக் கொண்டவராய் இருந்தால் சமுதாயம் எவ்வளவு இனிமையாய் இருக்கும். தன்னை மறந்து பிறர்க்கு நன்மை செய்யும் தியாகப் பண்பைக் கொள்ளாதிருத்தலே வறுமை என வள்ளுவர் கூறும் உரிய கருத்தை வாழ்க்கையில் ஊன்றி நினைத்து கடைப்பிடித்துத் தியாகிகளாக வாழ மனிதர் நாம் முயலவேண்டும்.

தன்னையும் விற்றல் ஒருவன், தன்னைப் பற்றிச் சிறிதும் எண்ணாமல் எப்பொழுதும் பிறருக்கே உதவி செய்து கொண்டு பிறர் துன்பத்தையே போக்கிக் கொண்டு இருப்பானானால் , அவனுக்குக் கேடு வந்து விடாதா? தான் வறுமையடைந்து துன்புற மாட்டானா? அந்தக் கேடுகளை எப்படி நீக்குவது? அவன் செல்வமும் அழிந்து விடுமே! இவ்வாறு ஒருவன் நினைப்பது இயற்கை. ஒருவன் தான் நன்றாக வாழ வேண்டும் எனத் தன்னலத்தால் தான் நுகர்வதற்குப் பலவகையான வாழ்க்கை வசதிகளையும் பெருக்கிக் கொள்ள நினைந்து, முயற்சி செய்கிறான். அவ்வசதிகளைப் பெறுவதற்குத் தன்னை விற்கவும் தயராகின்றான். தன்னை விற்று அதனால் வரும் பொருளைத் தன் துன்பத்தை நீக்குவதற்குப் பயன்படுத்த நினைக்கிறான். அப்படியானவனைத் திருவள்ளுவர் கயவன் எனக் குறிப்பிடுகிறார். "எற்றிற்குரியர் கயவர் ஒன்றுற்றக்கால் விற்றற் குரியர் விரைந்து" என்பது அவர் கருத்து. தன் துன்பத்தை நீக்கப் பிறருக்கடிமையாய் நிற்க அவன் அஞ்சுவதில்லை. ஆகவே தனக்காக அடிமையாய் வாழ நினைப்போரைக் கயவர் என இழித்தும் பழித்தும் அடித்தும் கூறுகின்றார். ஆனால், ஒருவன் பிறர் துன்பத்தைப் போக்குவதற்காகத் தன்னை விற்று அடிமைப்படுத்திக் கொண்டு இருப்பானே ஆனால் அது மிக உயர்ந்தது என்பது வள்ளுவர் வழியாகும்.

ஆகவே ஒப்புரவு செய்வதால் துன்பம் வந்தாலும் அத் துன்பத்தை நீக்க தன்னை விற்றாவது விலக்கிக் கொள்ளலாம் என்கிறார் அவர். அதாவது தன்னை விற்று அடிமையாக மாறுவது இழிசெயல். ஆனால் பிறருக்காகச் செய்யப்படுமேயானால் மிக உயர்ந்ததே அன்றி இழிந்ததன்று. பழிக்கத் தக்கதாயினும் அது ஏற்றுச் செய்யத் தக்கதே. அவர்குறளைப் பார்ப்போம்"ஒப்புரவு வினால் வருங் கேடெனின் அஃதொருவன் விற்றுக்கோள் தக்க துடைத்து"

சிவபெருமானுக்குத் தியாகராசன் என்றும் பெயர் உண்டு. கடலைக் கடந்த காலத்தில் நஞ்சும் அமிழ்தும் தோன்றின. நஞ்சை உண்ண யாரும் முன்வரவில்லை. அது துன்பம் தரும் என்பதை எல்லோரும் அறிவார்கள்.அது உண்பாரைக் கொல்லக் கூடியது என்று அறிந்தும் பிறர் துன்பத்தைப் போக்கவதற்காகச் சிவபெருமான் அந்நஞ்சினை உண்டார் என்பர். அதனால் அவர் தியாகராசன் ஆனார்.அது உயரிய ஒப்புரவுப் பண்பை விளக்கும். பிறருக்காக ஒருவன் சாவது மேலுலகைத் தரும் எனக் கம்பன் கூறுகின்றான். "ஆவுக் காயினும் அந்தணருக்காயினும் யாவருக்காயினும் எளியவருக்காயினும் சாவப் பெற்றவரே தகை வானுறை தேவருந்தொழுந் தேவர்களாகுவர்" எவர் துன்புற்றாலும் அவருக்கு உதவி செய்யவேண்டும். துன்பத்தை நீக்க அவர் உயிரையும் தருவது உயர்ந்ததாம் என்பதே இதன் கருத்தாம். இராவணன் இராம சேனையோடு போர் புரிந்து கொண்டிருந்தான்.அவன் படைகளை எல்லாம் விபீடணன் உதவியால் அறிந்த இலக்குவன் எளிதாக விலக்கிக் கொண்டிருந்தான். அதை அறிந்த இராவணன் விபீடணன் மீது அம்பை விட்டான். அச் சமயத்தில் விபீடணனைக் காப்பதற்காக தான் முன்பு போய் அம்பை ஏற்றுச் சுருண்டான். இவ்வாறு இலக்குவன் "மன் உயிர் கொடுத்த வன்மை"யை இராமன் பாராட்டிப்பேசினான்.

"புறவொன்றின் பொருட்டாக யாக்கை புண்ணுற வரிந்த புத்தேள் அறவனுமைய நின்னை நிகர்க்கிலனப்பால் நின்ற பிற வினை யுரைப்பதென்னே பேரருளாள ரென்பார்கறவையுங் கன்று மொப்பார் தமர்க்கிடர் காண்கி லென்றார்" எனவே தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்குத் துன்பம் வரின் கறவையும் கன்றும் போல் ஒன்றுபட்டுத் துன்பம் போக்குவர் என்பது கருத்து.


தியாகத்தின் உச்சக்கட்டத்தை எய்தியவர் புறாவுக்காகத் தன்னுடலை அரிந்து தந்த சிபிமன்னன் என்பது எல்லோரும் அறிந்த செய்தி.ஆனால் இலக்குவனுக்கு அந்தச் சிபியும் நிகரில்லை என இராமன் எடுத்துக் காட்டுகிறான்.இக்காலத்தில் சமுதாய நன்மைக்காகத் தம் துன்பத்தையும் பாராமல் பிற ருக்காக உதவுபவர் பலரைக் காண்கிறோம். இரத்தம் ஒருவர் வாழ்வதற்கு மிகமிக இன்றியமையாதது. இன்னொருவரை இன்னொருவரை வாழ்விப்பதற்காகத் தம் இரத்தத்தைக் கொடுப்பவர் ஒப்புரவாளல்லரோ? ஒருவருக்குச் சிறுநீரகம் இரண்டு உண்டு. அவற்றுள் ஒன்றிருந்தாலும் போதும். அதனால் துன்புறும் ஒருவருக்குத் தம்மிடமுள்ள ஒரு சிறுநீரகத்தை மற்ற வருக்கு எடுத்து வைப்பதற்காகக் கொடுப் பவரை இன்றைய உலகில் காண்கின் றோமன்றோ?

வாடிய பயிரைக் கண்டாலும் அவ் வாட்டத்தை நீக்க முயலும் ஈர நெஞ்சினர் பண்பை எப்படிப் போற்றுவது? ஈகைவேறு, ஒப்புரவு வேறு, ஈகை என்பது வறியவர்க்குத் தருவது; மறு உலகில் நல மாய் வாழலாம் என்ற எண்ணத்தில் செய்வது.ஆனால், ஒப்புரவு இப்பூமியில் துன் புறுவார் துன்பத்தைத் துடைக்க எழுவது; பயன் எதிர்பாராதது. சமுதாயக் கூட்டுற வுக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் இப்பண்பு மிக உதவுவது.சோசலிச சமுதாயத்தை அரசியல் சட்டமில்லாமல் மன வளர்ச்சியால் காட்டு கிறாரோ! இது வள்ளுவர் கண்ட புதிய தத்து வம். (முற்றும்)

---

# அரசியல் பிரச்சினைகளுக்கு இராணுவ ரீதியில் தீர்வுகாணமுடியாது

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல் பிரச்சினைகளுக்கு இராணுவ ரீதியில் தீர்வு காண முடியாதென பிரதம நீதியரசர் அசோக டிசில்வா தெரிவித்துள்ளார்.

அரசியல் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியான தீர்வுத்திட்டங்களையே முன்வைக்க வேண்டும் எனவும், இராணுவ ரீதியான நடவ டிக்கைகள் மூலம் இறுதித் தீர்வுத்திட்டத்தை எட்டமுடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

இன ஒற்றுமை தொடர்பில் மக்களிடம் போதியளவு விளக்கம் காணப்பட வேண்டியது மிகவும் அவசியமானதென அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை பரிசளிப்பு விழா ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய மக்களின் கருத்துக்கள் மற்றும் சமய நம்பிக்கைகள் தொடர்பில் அனைவரும் நெகிழ்வுப் போக்குடன் செயற்பட வேண்டியது இன்றியமையாததெனவும் யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் ஐக்கிய இலங்கையை மீளக்கட்டியெழுப்பக் கூடிய ஓர் சந்தர்ப்பம் கிட்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (6-2)

---

# அமைச்சர்கள் பொது இடங்களில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்

## அரசாங்கத்தினால் ஒழுக்கவிதி தயாரிப்பு

(கொழும்பு)

அரசாங்க அமைச்சர்கள் பொது இடங்களில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்த ஒழுக்க விதியொன்று தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

பாதைகளில் பயணிக்கும்போதும், பொது இடங்களில் தோன்றும் போதும் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பது குறித்தும் அரசாங்கம் அறிவுறுத்த உள்ளது.

அத்துடன் அமைச்சர்கள் பொதுப் பாதைகளில் பயணிக்கும் போது தான்தோன்றித் தனமாக செயற்படுவதாகவும் பொதுமக்கள் பாதைகளில் பயணிக்க முடியாத வகையில் பயணங்களை மேற்கொண்டு வருவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இது குறித்து ஒழுக்க விதி விரைவில் அறிவிக்கப்படும் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (6)

---

# 20 மில்லியன் கப்பம் கேட்ட இருவரை பொலிஸார் மடக்கி பிடித்தனர்

(கொழும்பு)

மாத்தளைப் பகுதியைச் சேர்ந்த செல்வந்தர் ஒருவரை மிரட்டி 20 மில்லியன் ரூபாயை கப்பமாகப் பெற்ற ஆட்கடத்தல் கும்பலைச் சேர்ந்த இருவர் மாத்தளைப் பொலிஸ் நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள் மூன்றாவது நபர் தப்பிச் சென்றுவிட்டார்.

அக்குரம்பொட பகுதியைச் சேர்ந்த இச் செல்வந்தரின் மகளை இவர்கள் இலக்கு வைத்திருந்திருக்கின்றார்கள்.

இச் செல்வந்தர் 20 மில்லியன் ரூபாயை கப்பமாகத் தராவிட்டால் அவரின் மகளைக் கடத்தி விடுவோம் என்று மிரட்டி இருக்கின்றார்கள்.

தகவல் அறிந்த மாத்தளைப் பொலிஸார் இந்த ஆட்கடத்தல்காரர்களைக் கைது செய்கின்றமைக்கான வியூகங்களை வகுத்தனர்.

கொலஹென்வத்தைப் பிரதேசத்தில் வைத்து ஆட்கடத்தல்காரர்களிடம் பணம் ஒப்படைக்கப்பட்டது.

தயார் நிலையில் மறைந்திருந்த பொலிஸார் ஆட்கடத்தல்காரர்களில் இருவரை இப் பணத்துடன் கைதுசெய்தனர். மூன்றாவது நபர் தப்பிச் சென்றுவிட்டார். கைது செய்யப்பட்ட இருவரினதும் உடைமைகளில் இருந்து பிஸ்டல் துப்பாக்கி ஒவ்வொன்று கைப்பற்றப்பட்டன.

தப்பிச் சென்ற மூன்றாவது நபர் விட்டு விட்டுச் சென்ற கைக்குண்டு ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளார்கள். இக் கைக் குண்டு உள்நாட்டில் தயாரிக்கப்பட்டதாகும். (ந-5)

# விடுதலைப்புலி சந்தேக நபர்களிடமிருந்து கையடக்கத் தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளைப் பேணிய சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளிடமிருந்து கையடக்கத்தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு சிறைச்சாலையில் நடத்தப்பட்ட திடீர் சோதனையின் போது குறித்த கையடக்கத்தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை அதிகாரிகளினால் இந்த திடீர் சோதனை நடத்தப்பட்டதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் வீ.ஆர். சில்வா தெரிவித்துள்ளார்.

கைதிகள் தடைசெய்யப்பட்ட பொருட்களை பயன்படுத்துவதனை தடுக்கும் நடவடிக்கையின் ஓர் கட்டமாக இந்தத் திடீர் சோதனை நடத்தப்பட்டுள்ளதுடன் கைதிகளை பார்வையிடுவதற்கு செல்லும் நபர்களின் பெயர் விபரங்களும் பதிவு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# இவ் வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் 420 சிறுவர்கள் காணாமல் போயுள்ளனர்

## பொலிஸார் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இந்தவருடத்தின்முதல்நான்குமாதங்களில் சுமார் 420 சிறுவர்கள் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இதில் 270 சிறுமிகளும் 150 சிறுவர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காணாமல் போன சிறுவர்களில் இது வரையில் 225 சிறுவர், சிறுமியர் மட்டுமே கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய சிறுவர்,சிறுமியரை இன்னமும் காணவில்லை எனவும் தொடர்ச்சியாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அத்துடன் அநேகமான சந்தர்ப்பங்களில் கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதுடன் அனுராதபுர பிரதேசத்தில் அதிகளவு சிறுவர், சிறுமியர் காணாமல் போயுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

12 முதுல் 18 வயது வரையிலான சிறுவர் சிறுமியரே இவ்வாறு அதிகளவில் காணாமல் போயுள்ளனர். (6)

# லெபனானின் பொது மன்னிப்பு காலத்தில் 3000 இலங்கையரை அழைத்துவர ஏற்பாடு

(கொழும்பு)

பல்வேறு காரணங்களுக்காக நாட்டைவிட்டு வெளியேற முடியாதுள்ள வெளிநாட்டினருக்கு பொதுமன்னிப்புக் காலமொன்றை லெபனான் அரசு அறிவித்துள்ளது. லெபனானிலிருந்து நாடு திரும்ப முடியாதுள்ள இலங்கையர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் சட்டத்தரணி கிங்ஸ்லி ரணவக்க அறிவித்துள்ளார்.

விசாக்காலம் முடிவடைந்த நிலையிலும் கடவுச்சீட்டின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்துள்ள நிலையிலும் நாடு திரும்ப முடியாமல் இருக்கும் இலங்கையர்களை திரும்பி அழைத்துக் கொள்ள அவர்களது உறவினர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பல்வேறு காரணங்களுக்காக இலங்கை திரும்ப முடியாமல் சுமார் 3 ஆயிரம் பேரளவில் லெபனானில் தங்கியுள்ளனர்.

லெபனானிலுள்ள இலங்கைத் தூதுவர் எம்.மஹ்ரூப் மற்றும் தெற்காசிய நாடுகளின் தூதுவர்கள் சிலர் லெபனான் உள்துறை அமைச்சுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாகவே மூன்றுமாத கால பொது மன்னிப்பு வழங்க லெபனான் அரசு முடிவு செய்தது.

சட்டப்பிரச்சினைகள் தொடர்பாகவும் பல்வேறு காரணங்களுக்காகவும் இன்னல்களுக்குள்ளானநிலையிலும் லெபானானி லுள்ள இலங்கைத் தூதரகத்தின் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள இலங்கையரும் விசாக்காலம் முடிவடைந்த நிலையில் பெருந்தொகையான பணத்தை தண்டப் பணமாக செலுத்தமுடியாமலும் உள்ள மற்றும் சிறையிலுள்ளவர்களுக்குமாக சுமார் 3 ஆயிரம் பேர் இந்தப் பொதுமன்னிப்புக் காலத்தை பயன் படுத்திக் கொள்ளமுடியும்.

கடவுச் சீட்டின் செல்லுபடியான காலம் முடிவடைந்துள்ள நிலையில் நாடு திரும்ப முடியாமல் உள்ள இலங்கையர் லெபனானிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு சென்று தற்காலிக கடவுச் சீட்டைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் விமான டிக்கெட்டுக்களின் காலம் முடிவடைந்திருப்பின் அவற்றையும் புதுப்பித்து வழங்க இலங்கைத் தூதரகம் ஆயத்தமாகவுள்ளது என்று பணியகத்தின் தலைவர் தெரிவித்தார்.

நாடு திரும்பும் இலங்கையரை குழுக்களாக அழைத்து வருவதற்கு ஏதுவாக விசேட விமானங்களை ஏற்பாடு செய்வதற்காகவும் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. (6)

# இலங்கையிடம் கடற்படை பயிற்சியை கோரியுள்ள நாடுகள்

(கொழும்பு)

அமெரிக்கா,பிரிட்டன்,பாகிஸ்தான் மற்றும் இந்தியா போன்ற நாடுகள் இலங் கையிடம் கடற்படைப் பயிற்சியை கோரி யுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை கடற்படையினருடன் இணைந்து கடற்படை பயிற்சிகளை மேற்கொள்ள குறித்த நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திசர சமரசிங்க மேற்குறித்த ஊடகத்திடம் தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்காலத்தில் குறித்த நாடுகளைச் சேர்ந்த கடற்படை அதிகாரிகள் இலங்கையில் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்காக விஜயம் செய்வார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளதோடு இலங்கையில் போர் இடம்பெற்ற காலத்தில் அமெரிக்கப் போர்க் கப்பல்கள் திருகோணமலை துறைமுகத்திற்கு செல்ல அஞ்சியதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சட்டவிரோத குடியேறிகளுக்கு எதிராக கடற்படையினர் எடுத்த நடவடிக்கைகளுக்கு நன்றி பாராட்டும் நோக்கில் அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கை கடற்படையினருக்கு பயிற் சிகளை வழங்கத் தீர்மானித்துள்ளதையும் அவர் தெரிவித்துள்ளார். (6-2)

# சுற்றாடல் முகாம்

யாழ். நவக்கிரி அ.மி.த.க. பாடசாலையும் தோப்பு அருள் நந்தி வித்தியாலயமும் இணைந்து சுற்றாடல் முகாம் ஒன்றை முகாம் ஒன்றை நாளை காலை 9 மணிக்கு நடத்தவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆரம்பக்கல்வி உதவிப் பணிப்பாளர் பூ.குகதாசன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். (6-2)

# 26.07.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- 811 - பைசண்டை பேரரசன் முதலாம் நிக்கபோரஸ் பல்கேரியாவின் பிளிஸ்கா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் கொல்லப்பட்டான்.
- 1139 - முதலாம் அபொன்சோ போர்த்துக்கல்லின் முதலாவது மன்னனாக முடிசூடி லெயோன் பேரரசில் இருந்து விடுதலையை அறிவித்தான்.
- 1788 - நியூயோர்க் ஐக்கிய அமெரிக்காவின் 11வது மாநிலமாக இணைந்தது.
- 1803 - உலகின் முதலாவது பயணிகள் தொடருந்து சேவை தெற்கு லண்டனில் ஆரம்பமாகியது.
- 1847 - லைபீரியா ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1848 - மாத்தளை கிளர்ச்சி: இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராக வீரபுரன் அப்பு தலைமையில் கிளர்ச்சி வெடித்தது. வீரபுரன் அப்பு கைது செய்யப்பட்டு ஆகஸ்ட் 8 இல் தூக்கிலிடப்பட்டான்.
- 1891 -டெஹீட்டி பிரான்சுடன் இணைந்தது.
- 1944 -இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவம் உக்ரைனின் லுவிவ் நகரை நாசிகளிடம் இருந்து கைப்பற்றினர். அந்நகரில் இருந்த 160,000 யூதர்களில் 300 பேர் மட்டுமே எஞ்சியிருந்தனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியின் முதலாவது வி - 2 ஏவுகணை பிரித்தானியாவைத் தாக்கியது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியின் போட்ஸ்டாம் என்ற இடத்தில் சோவியத் ஒன்றியம், அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றிற்கிடையில் போட்ஸ்டாம் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1945 - ஹிரோசிமாவில் போடப்படவிருந்த அணுகுண்டைத் தாங்கியவண்ணம் இண்டியானாபொலிஸ் என்ற அமெரிக்கக் கடற்படைக்கப்பல் டினியான் தீவை அடைந்தது.
- 1952 - எகிப்தில் நிகழ்ந்த இராணுவப் புரட்சியில் மன்னர் பாரூக் பதவியில் இருந்து அகற்றப்பட்டு அவரது ஆறு மாதங்கள் அகவையுடைய மகன் இரண்டாம் புவாட் மன்னன் ஆக்கப்பட்டான்.
- 1953 - கியூபாபுரட்சி: கியூபாவில் மொன்காடா இராணுவத்தளம் மீது பிடெல் காஸ்ட்ரோ தலைமையில் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதல் முறியடிக்கப்பட்டது.
- 1956 - அஸ்வான் அணைக்கட்டுக்கு உலக வங்கி நிதி உதவி வழங்க மறுத்ததை அடுத்து சூயஸ் கால்வாயை எகிப்திய அதிபர் கமால் அப்துல் நாசர் அரசுடமை ஆக்கினார்.
- 1957 - குவாத்தமாலாவின் சர்வாதிகாரி கார்லொஸ் அர்மாஸ் கொல்லப்பட்டார்.
- 1958 - எக்ஸ்புளோரர் 4 ஏவப்பட்டது.
- 1963 - மசிடோனியாவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 1,100 பேர் வரை கொல்லப்பட்டனர்.
- 1965 - மாலைதீவுகள் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து முழுமையாக விடுதலை பெற்றது.
- 1971 - அப்பல்லோ 15 விண்கலம் ஏவப்பட்டது.
- 1974 - ஏழாண்டுகள் இராணுவ ஆட்சியின் பின்னர் கிரேக்கத்தில் மக்களாட்சி ஏற்பட்டது.
- 1994 - எஸ்தோனியாவில் இருந்து ரஷ்யப் படைகளை வெளியேற்ற அதிபர் பொரிஸ் யெல்ட்சின் முடிவெடுத்தார்.
- 2005 - டிஸ்கவரி விண்ணோடம் ஏவப்பட்டது.

### பிறப்புகள்

- 1791 - பிரான்ஸ் மொசார்ட் இசையமைப்பாளர் (இ. 1844)
- 1856 - ஜோர்ஜ் பெர்னாட் ஷா, எழுத்தாளர் (இ. 1950)
- 1933 - எட்மண்ட் ஃவெல்ப்ஸ், பொருளியல் அறிஞர்
- 1933 - மு.கு. ஜகந்நாதராஜா, பன்மொழிப் புலவர் (இ.2008)
- 1939 - ஜோன் ஹவார்ட், ஆஸ்திரேலியாவின் 25வது பிரதமர்
- 1971 - மேரி ஆன் மோகன்ராஜ், எழுத்தாளர்.


### இறப்புகள்

- 1857 - ஒராசியோ பெட்டாச்சினி, யாழ்ப்பாணம் ஆயர்

**1957 இலங்கைப் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர். டி பண்டாரநாயக்காவுக்கும் இலங்கை தமிழரசுக்கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களுக்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.**



# திருப்பதியில் உலக தரத்தில் ரயில் நிலையம் அமைக்கப்படவுள்ளது



(திருப்பதி)

திருப்பதி மேற்கு ரயில் நிலையம் உலக தரத்தில் மாற்றி அமைக்கப்படுகிறது.

மத்திய ரயில்வே துறை இணை அமைச்சர் கே. எச்.முனியப்பா திருப்பதியில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் தெரிவிக்கையில், திருப்பதி மேற்கு ரயில் நிலையத்தை உலக தரத்தில் மாற்றி அமைக்க ரயில்வே அமைச்சகம் முடிபு செய்துள்ளது.

இதற்காக 150 ஏக்கர் நிலம் தேவை அதில் 60 ஏக்கர் நிலம் ரயில்வேயிடம் உள்ளது. ஆயிரம் கோடி ரூபாய் செலவில் பணிகள் நடக்கும் 5 ஆண்டுகளில் பணிகள் முடிவடையும் . இந்த பணிகள் முடிந்த பின்னர் திருப்பதி ரயில் நிலையத்தில் 9 தரிப்பிடங்கள் இருக்கும் .

மேலும் சரக்கு ரயில்கள் செல்ல தனியாக 2 தண்டவாளங்களும் அமைக்கப்படும் என்றார். (6)

# சட்டவிரோதமாக பிரிட்டனுக்கு நுழைய முயன்ற ஏழு இந்தியர்கள் தடுத்து வைப்பு

பிரிட்டனுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்ற ஏழு இந்தியர்களை அந்நாட்டு அதிகாரிகள் தடுத்து நிறுத்தியுள்ளனர். பிரான்சிலிருந்து பிரிட்டன் வேல்ஸ் நகரில் உள்ள லியானெல் என்ற இடத்திற்கு கப்பல் மூலம் இரும்புக் கம்பிகளை ஏற்றிய கன்டெய்னர் லொறி ஒன்று கொண்டு செல்லப்பட்டது. துறைமுகத்தில் இறக்கப்பட்ட அந்த லொறி பின்னர் பிரிட்டனுக்குள் செல்ல முற்பட்டது. எல்லையில் அந்த லொறியை பிரிட்டன் பொலிஸார் தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர்.

அப்போது லொறியில் அடுக்கப்பட்டிருந்த இரும்புக் கம்பிகளுக்கு இடையில் சிலர் மறைந்திருப்பதை கண்டு பிடித்தனர். பின்னர் காபன்டை ஒக்சைட் வாயுவை லொறிக்குள் செலுத்தி அவர்களை வெளியில் வர வழைத்தனர். லொறிக்குள் இருந்து வெளியில் வந்த ஏழு பேரிடமும் பிரிட்டன் பொலிஸார் விசாரணை நடத்தியதில் அவர்கள் இந்தியர்கள் எனவும் சட்டவிரோதமாக பிரிட்டனுக்குள் நுழைய முயற்சி செய்துள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது. இதையடுத்து ஏழு இந்தியர்களையும் பிரிட்டன் பொலிஸார் பிரான்ஸ் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இது தொடர்பாக பிரிட்டன் எல்லை பாதுகாப்பு படை அதிகாரி கரோல் அப்ஸ்ட்ரெயில் கூறியதாவது,

பிரான்ஸ் வழியாக ஏராளமான வெளிநாட்டினர் லொறிகள் மூலம் பிரிட் டனுக்குள் சட்டவிரோதமாக குடியேற முயற்சி செய்கின்றனர். இதை பிரான்ஸ் அதிகாரிகள் தடுக்கத் தவறிவிடுவது கவலை அளிக்கிறது. சட்ட விரோத குடியேற்றத்தை தடுக்க நாங்கள் அதிநவீன யுக்திகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்துகிறோம்.

லொறிகளில் மறைந்து இருப்பவர்களை கண்டுபிடிக்க காபன் டை ஒக்சைட் வாயுவை இயந்திரம் மூலம் செலுத்தி சோதனை இடுகிறோம். இதய துடிப்பை கண்டறியும் கருவி ஸ்கேனர்கள் மோப்ப நாய்கள் உதவியுடன் நாங்கள் சோதனை நடத்துகிறோம்.

கடந்த 2009ஆம் ஆண்டில் பிரிட்டனுக்குள் சட்ட விரோதமாக குடியேற முயன்ற 29 ஆயிரம் வெளிநாட்டினரை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர் இவ்வாறு கரோல் அப்ஸ்ட்ரெயில் கூறினார். (6)




# அணுவாயுதம் தயாரிக்கும் நிலையிலுள்ளபோதும் என் தாய்நாடு வறுமையிலிருந்து மீள வில்லை

## காந்தியின் பேரன் வேதனை


(லண்டன்)

என் தாய்நாடு அணு ஆயுதம் தயாரிக்கும் நிலைக்கு வளர்ந்த பின்னும் இன்னும் தண்ணீர் பிரச்சினையும் வறுமையும் வாட்டி வதைக்கிறது. என காந்தியின் பேரன் ராஜ் மோகன் காந்தி வேதனை தெரிவித்துள்ளார்.

காந்தியின் கடைசி மகனான தேவதாஸ் காந்தியின் மகன் ராஜஸ்மோகன் காந்தி அமெரிக்காவின் இல்லினாய்ஸ் மாகாணத்திலுள்ள இல்லி னாய்ஸ் பல்கலைக் கழகத்தில் தெற்காசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் பற்றிய ஆராய்ச்சித் துறையில் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம்கள் அல்லாதவர்களுக்கு இடையிலான சமரசப் புரிந்துணர்வை ஏற்படுத்தும் முயற்சியில் அவர் ஈடுபட்டு வருவதற்காக பிரிட்டனின் லிவர்பூல் ஹோப் பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது.

பட்டமளிப்பு விழாவில் ராஜ்மோகன் காந்தி பேசியதாவது பிரிட்டனில் மனித பண்பு என்பது முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களைச் சார்ந்தே உள்ளது அவர்களுக்கு இடையில் நட்புறவு ஏற்படுத்தப் படவேண்டும் இரு தரப்பிலுமுள்ள மக்கள் அறிஞர்கள் அரசாங்கத்தில் உள்ளவர்கள் மதத் தலைவர்கள் பத்திரிகையாளர்கள் மற்றும் கலைஞர்கள் என அனைத்து தரப்பிலும் நட்



புறவு ஏற்பட வேண்டும்.

என் தாய் நாடு தற்போது அணு ஆயுதம் தயாரிக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது. ஆனால் இன்னும் அங்கு தண்ணீர் பிரச்சினை உள்ளது. வறுமையிலிருந்து மீள்வதற்கு இலட்சக் கணக்கான மக்கள் போராடி வருகின்றனர். இந் நிலையில் சியாச்சின் போன்ற பகுதிகளில் இந்திய பாகிஸ்தான் வீரர்கள் துப்பாக்கி எந்திய நிலையில் சண்டையிடத் தயாராக உள்ளனர் இந்த நிலை மாற வேண்டும் இவ்வாறு ராஜ் மோகன் காந்தி தெரிவித்தார். (6)

# ஈழத்தமிழரின் வாழ்க்கை மீட்சிபெற இந்தியாவின் கடும் நடவடிக்கை தேவை

(கொழும்பு)

ஈழத் தமிழர்கள் தமிழக மீனவர்கள் படும் துன்பங்களைக் களைந்து அவர்கள் மீட்சி பெற இந்திய அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று திரா விடர் கழகத் தலைவர் கி.வீரமணி கோரியுள்ளார்.

இந்திய மத்திய அரசு எவ்வளவு வன்மையாக இலங்கையைக் கண்டித்து ஈழத் தமிழருக்குப் புதுவாழ்வு, வாழ்வுரிமை ஆகியவற்றைப் பெற்றுக் கொடுக்கின்றமையில் முதல் நாடாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்படுகின்றமையைத் தடுக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுள்ள அவர் தமிழர்களின் வாக்கினால் ஆட்சி அமைத்திருக்கும் மத்திய அரசு ஈழத் தமிழர் பிரச்சினை தமிழக மீனவர் பிரச்சினை இரண்டையும் தீர்த்து வைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவற்றுக்கு எல்லாம் எப்படி எப்போது தீர்வு காணப்போகிறது டில்லி அரசு என்று கேட்கிற உரிமை தமிழர்களுக்கு உண்டு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளதோடு தமிழர்களின் குமுறல் அலட்சியப்படுத்தப்படக் கூடியதல்ல என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

(6-2)

# இலங்கைத் தமிழர்களுக்காக இந்திய அரசு எதுவித உதவிகளும் செய்யவில்லை

## புதிய தமிழகம் கிருஷ்ணசாமி குற்றச்சாட்டு


(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் உதவிகள் எதுவும் செய்யவில்லை என்று புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இது குறித்து தெரிவிக்கையில்,

ஏற்கனவே இலங்கைக்கு எம்.பிக்கள் குழு ஒன்று சென்று எதனையும் சாதிக்காத நிலையில் தற்போது மீண்டும் ஒரு தூதுக் குழுவை அனுப்ப வேுண்டும் என்ற கோரிக்கை தேவையற்றது. என்று கூறினார்.

தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றும் அந்நாட்டு அரசின் நடவடிக்கையை அங்குள்ள எம்.பிக்கள் உறுதிப்படுத்தி இருப்பதாகவும் இலங்கை அரசு மீது ஐ.நா. விசாரணை நடத்த இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்றும் கூறிய தோடு இலங்கைத் தமிழர்களுக்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் எந்தவித உதவியும் செய்யவில்லை என்றும் குற்றம் சாட்டினார். (6-2)



சாமியார் நித்தியானந்தா வெளியூரில் இருந்த போது ஆச்சிரமத்தில் அவரை வழிபடுவதற்காக அவர் போன்று உருவாக்கப்பட்ட பிரதிஷ்டா மூர்த்தியை பல்லக்கில் வைத்து பெங்களூர் ஹெங்கேரியிலிருந்து பீடத்திற்கு பக்தர்கள் ஊர்வலமாக எடுத்து சென்றனர்.

# இலங்கை அரசுக்கு வழங்கி வரும் நிதியுதவியை நிறுத்த வேண்டும்

## இந்திய மத்திய அரசிடம் புதிய நீதிக்கட்சி கோரிக்கை

இலங்கை அரசுக்கு மத்திய அரசு வழங்கி வரும் நிதி உதவியை நிறுத்த வேண்டும் என்று புதிய நீதிக்கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

புதிய நீதிக்கட்சியின் செயற்குழு கூட்டம் சென்னை தியாகராயநகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கட்சியின் நிறுவன தலைவர் ஏ.சி.சண்முகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தின் முடிவில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மத்திய அரசு இலங்கை அரசுக்கு செய்து வரும் தமிழர்களுக்கு எவ்விதமும் பயனற்ற நிதியுதவியை உடனடியாக நிறுத்த வேண்டும்.

மீன்பிடிக்க செல்லும் தமிழக மீனவர்களின் பொருட்களை சேதப்படுத்துவது துப்பாக்கி சூடு நடத்துவது ஆகிய செயல்களில் ஈடுபடும் இலங்கை இராணுவத்தையும் இந்த கொடுமைகளை தடுத்து நிறுத்தாத இலங்கை அதிபரையும் வன்மையாக கண்டிப்பது மத்திய அரசு இப்பிரச்சினையில் உடனடியாக தலையிட்டு தமிழக மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும். உட்பட 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (6)





வல்வை சிவகுரு வித்தியாசாலையின் ஆக்கத்திறன் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி கல்வி வலய விஞ்ஞான உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி ரோகினி கருணேஸ்வரன், வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் மற்றும் கல்லூரி சமூகத்தினரால் அழைத்துவரப்படுவதையும் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் தமது ஆக்கங்களுடன் நிற்பதையும் மாணவர்கள் கண்காட்சியை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கை விவகாரத்தில் இரட்டைவேடம் போடும் தென்னிந்திய நடிகர் சங்கம்

கொழும்பில் நடந்த சர்வதேச இந்தியப் பட விழாவுக்கு இந்தியாவைச் சேர்ந்த எந்த நடிகர் நடிகையும் போக கூடாது என திரையுலகினர் ஒன்று சேர்ந்து எடுத்த தீர்மானத்திற்கு தென்னிந்திய நடிகர் சங்கமும் ஒப்புக் கொண்டு எவரும் போகக் கூடாது என கேட்டுக் கொண்டிருந்தது.

இதனை மீறும் நடிகர், நடிகையர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பேசப்பட்டது. நடிகை அசின் இலங்கை போனதை கடுமையாக கண்டித்திருந்த நடிகர் சங்க செயலாளர் ராதாரவியும் அசின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியிருந்தார்.

இந்த நிலையில் நேற்று நடிகர் சங்கம் அப்படியே நேர் மாறான ஒரு முடிவை எடுத்துள்ளது.

நடிகர் சங்கத்தின் பொதுக்குழுக்கூட்டம் நேற்று நடிகர் சங்க வளாகத்தில் உள்ள சுவாமி சங்கரதாஸ் அரங்கத்தில் கூடியது.

காலை 10 மணிக்கு சங்கத் தலைவர் சரத்குமார் தலைமையில் ஆரம்பமான கூட்டத்தில் செயலாளர் ராதா ரவி, துணைத் தலைவர்கள் விஜயகுமார் , மனோரமா, பொருளாளர் வாகை சந்திரசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

கூட்டத்தின் முடிவில் இலங்கை செல்ல நடிகர், நடிகைகளுக்கு தடை போடக்கூடாது. தொழில் ரீதியாகவோ தனிப்பட்ட முறையிலோ நடிகர், நடிகைகள் செல்வதை இனி யாரும் தடுக்க கூடாது. இலங்கை செல்வதை தடுப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஈழத் தமிழர் படுகொலை புரிந்தோரை சர்



வதேச நீதிமன்றம் மூலம் தண்டிக்க வேண்டும் என இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதேபோல சினிமா இலாப -நஷ்டங்களுக்கு நடிகர்களிடம் நஷ்ஈடு கேட்கக் கூடாது என்று தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது. கொழும்பு பட விழாவுக்கு எந்த தமிழ் நடிகர், நடிகையும் போகாமல் கடும் சிரத்தையுடன் பார்த்துக் கொண்ட நடிகர் சங்கம் தற் போது யார் போனாலும் அதைத் தடுக்கக் கூடாது என்று கண்டிப்புடன் கூறியுள்ளது குறிப் பிடத்தக்கது.

கொழும்பு பட விழாவுக்குப் போகக் கூடாது என்று கடுமையாக நிர்ப்பந்திக்கப்பட்ட பொலிவூட் திரையுலகினர் தற்போதைய நடிகர் சங்க தீர்மானத்தில் பெரும் கோமாளிகளாக்கப்பட்டுள்ளனர். அமிதாப்பச்சன்முதல் சிறிய நடிகர் ,நடிகை வரை பலரும் இந்த விழாவுக்கு போகாமல் புறக்கணித்தனர்.

ஆனால் இப்போது நடிகர் ,நடிகையர் யாரும் இலங்கைக்குப் போவதை தடுக்கக் கூடாது என்று நடிகர் சங்கம் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (6)

## ஊர்காவற்றுறை சின்னமடுமாதா யாத்திரைத்தல திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப் பகுதியில் அமைந்துள்ள சின்னமடுமாதா யாத்திரைத் தல வருடாந்த திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.


தொடர்ந்து எதிர்வரும் 4 ஆம் திகதி புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு நற் கருணை திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை முதல் திருப்பலி காலை 6.30 மணிக்கும் திருவிழா திருப்பலி காலை 8 மணிக்கும் நடைபெறும் என பங்குத் தந்தை அருட்தி ரு. யே. அ. அருள்தாசன் அறிவித்துள்ளார்.

மேலும் இதற்குரிய பயண ஒழுங்குகள் மற்றும் இத்திருவிழாவை சிறப்பாக நடத்துவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (6-2)

## ஆடிவேல் உற்சவ கிராமிய ஊர்வலம்

(நாவலி)

நவாலி ஸ்ரீகதிர்காமமுருகன் கோவில் வருடாந்த ஆடிவேல் உற்சவ கிராமிய ஊர்வலம் இன்று மாலை 3 மணிக்கு நடைபெறும்.நாளை காலை 7 மணிக்கு அபிஷேகத்துடன் தீர்த்தம் இடம்பெறும். (6-2)




வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வித்தியாலய அதிபர் க.கனகராசா, தெல்லிப்பளை கோட்டக்கல்வி பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் விழாவில் வெளியிடப்பட்ட வயவன் மலரின் முதல் பிரதியை பிரதம விருந்தினராக கலந்துகொண்ட மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் சி.பத்மநாதனிடமிருந்து வைத்திய கலாநிதி லயன் மூ.பஞ்சலிங்கம் பெற்றுக்கொள்வதையும் சிரேஷ்ட மாணவ தலைவனுக்கு பிரதம விருந்தினர் சின்னஞ் சூட்டுவதையும் புதிய மாணவ முதல்வர்கள் சத்திய பிரமாணம் செய்வதையும் படங்களில் காணலாம்.

# இந்தியாவில் நிலவியல் கல்வி பயில்வதற்கான வாய்ப்புகள்

'ஜியாலஜி' எனும் சொல் கிரேக்க மொழியிலிருந்து தோன்றியது. பூமியின் கட்டமைப்பு, இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகள், வரலாறு, உருவான வழிமுறைகள் போன்றவற்றை ஆராய்ந்து அவற்றில் ஆய்வு மேற்கொள்ளும் துறை 'நிலவியல்' எனப்படும்.

இது புவியை உருவாக்கிய திட மற்றும் திரவப் பொருட்களை படிக்கும் அறிவியல் துறை. இத்துறையின் அறிவினைக் கொண்டு புவியில் இருக்கும் இயற்கை வளங்கள் அடையாளம் காணப்படுகின்றன.

நிலவியல் கோட்பாடுகளைப் பயன்படுத்தி சூரிய குடும்பத்திலுள்ள கோள்கள் ஆராயப்படுகின்றன. இதன்பெயர் 'விண் நிலவியல்' (அஸ்ட்ரோலஜி)

'தியோபிரேஸ்டஸ்' என்பவர் எழுதிய பெரிலித்தோன் என்ற புத்தகமே பாறைகள் பற்றிய அதிகாரபூர்வமான நூலாக இருந்தது. இவர் அரிஸ்டோட்டிலின் சிஷ்யன்.

1788 ஆம் ஆண்டு ஜேம்ஸ் ஹூட்டன் என்பவர் பூமியின் கோட்பாடுகள் பற்றிய கட்டுரையை வெளியிட்டார்.

இவரே முதல் 'நவீன நிலவியலாளர்' என்று அழைக்கப்பட்டார். 1769–1839 க்கு இடைப்பட்ட காலங்களில் வில்லியம் ஸ்மித் என்பவர் புவியின் அமைப்பு, பாறைப் படிவங்கள் ஆகியவற்றின் வரைபடங்கள் வரைந்ததுடன் அவற்றில் ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டார்.

1960 களில் புவித் தட்டின் கட்டமைப்பு (பிளேட் டெக்டானிக்ஸ்) என்ற கோட்பாடு உருவானது முக்கிய நிகழ்வாகும்.

இதன்பின் இத்துறை பெரும் வளர்ச்சி பெற்றது. 20ஆம் நூற்றாண்டில் பல ஆய்வுகள் நடத்தப்பட்டன.



புவியை ஆய்வு செய்வதற்கும், அவற்றின் வரலாறை அறிவதற்கும் நிலவியல் வல்லுநர்கள் களப் பணி, ஆய்வகப் பணி போன்ற வழி முறைகளைக் கையாளுகின்றனர்.

இவ்விரு வழிமுறைகளும் பல துறைகளை உள்ளடக்கியது.

களப்பணி கீழ்க்கண்ட துறைகளை உள்ளடக்கியது. நிலவியல் தொடர்பான வரைபடம் வரைதல், டோபோகிராபி எனப்படும் இடக்கிடப்பியல் சிறப்புக்களை அறிதல், புவி இயற்பியல் ஆராய்தல், நில அடுக்குகளை ஆராயும் ஸ்ட்ராடிகிராபி, நிலவியல் சார்ந்த உயிர் வேதியியல் மற்றும் நுண்ணுயிரியல், பழம் பொருட்களைக் கண்டறியும். ஆய்வுசெய்யும்' பேல் ஆன்டாலஜி' புவியின் காலத்தைக் கணக்கிடும்' ஜியோ குரோணாலஜி' மற்றும் ' தெர்மோ குரோனாலஜி', பனிப்பாறைகளின் தன்மைகளையும் அதன் இயக்கத்தையும் கணக்கிடும் 'கிளாசியாலஜி'

ஆய்வகப் பணி கீழ்க்கண்ட துறைகளை உள்ளடக்கியது. பாறைகள் ஆய்வு (பெட்ரோலஜி), கோள்கள் நிலவியல் (பிளாணட்டரி ஜியோலஜி), அப்ளைட் ஜியோலஜி, சுரங்க நிலவியல் (மைனிங் ஜியோலஜி), பெட்ரோலியம் நிலவியல், இன்ஜினியரிங் நிலவியல் இத்துறையில் இளநிலை மற்றும் முதுகலைப் படிப்புகள் உள்ளன. பி.எஸ்சி. ஜியோலஜி, எம்.எஸ்.சி. ஜியோலஜி, எம்.எஸ்.சி.அப்ளைட் ஜியோலஜி, எம்.டெக். ஜியோலஜி எம்.பில்.ஜியோலஜி

பயிற்றுவிக்கும் நிறுவனங்கள்: டில்லி பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை வ. உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி பிரெசிடென்சி கல்லூரி, சென்னை அண்ணாமலை பல்கலைக்கழகம்- அண்ணாமலை நகர், ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி - மதுரை, பெரியார் பல்கலைக்கழகம் சேலம்.

## அறிவுக் கலசம்

வலம்புரி

ஆர்.யூ.பாலமுருகன்

# இந்தியாவில் உயர்கல்வி உங்கள் வாழ்க்கையின் ஏறுபடி

அன்பான மாணவச் செல்வங்களே அவர்களின் எதிர்கால வாழ்க்கையில் அக்கறை கொண்ட பெற்றவர்களே க.பொ.த. உயர்தரப் பரீட்சசை எழுதிய மாணவர்கள் எல்லோருக்குமே பல்கலைக்கழக அனுமதிகள் அவர்கள் விரும்பிய துறைகளில் கிடைப்பது இல்லை.

ஆனாலும் இன்றைய காலத்தில் ஆகக் குறைந்து Bachelor degree என்பது அடிப்படை கல்வித்தகுதியாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

விரைந்து ஓடிக் கொண்டிருக்கும் கால வட்டத்தில் மறுபடியும் க.பொ.த உயர்தரப் பரீட்சையை எடுப்பது என்பது பெருமளவிலான மாணவர்களுக்கு மீண்டும் வருத்தத்தையே தரும் என்பது ஒத்துக் கொள்ள வேண்டிய ஆனால் வெளிப்படையான உண்மை.

ஏனெனில் ஒரு வருடத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களில் 15% ஆனவரே பல்கலை அனுமதி கிடைக்கப் பெறுகிறார்கள்.

இதே மாணவர்கள் மறுபடியும் 2ம் தடவை அல்லது 3ஆம் தடவை பரீட்சை எழுதும்போது அவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதி வாய்ப்பு மேலும் குறைந்து போகின்றது. மேலும் மாணவர்கள் உயர்தரப்பரீட்சையை மறுபடியும் எடுப்பதன்மூலம் அவர்களின் பெறுமதி மிக்க காலம் வீணடிக்கப்படுகின்றது.

இவ்வாறான சிரமங்கள் தெரிந்தும் மீண்டும் மீண்டும் போட்டிப் பரீட்சைக்கு தம்மைத் தயார்ப்படுத்த வேண்டிய சூழ்நிலைக்கு மாணவர்கள் தள்ளப்படுவது ஏன்? பிரதான காரணம் மேற்படிப்புக்கான பொருளாதார வசதி இன்மை, மேற்படிப்பினை மேற்கொள்ள மேலைத்தேய நாடுகளுக்கு தான் செல்லவேண்டும் என்ற அவசியம்.

## V4 EDUCATIONAL CONSULTANCY

கடன்பட்டு பிரித்தானியா சென்று அங்கு உள்ள உயர் வாழ்க்கைத்தரத்தினை ஈடுகட்டவும் வேண்டும். கல்விக் கட்டணத்தினை உழைத்துக்கட்டவும் வேண்டும். அதேநேரம் கல்வி பயிலவும் வேண்டும். இன்றைய சூழலில் இது சாத்தியம் அற்றது. ஏனெனில் மாணவர்களுக்கான வேலை மற்றும் வேலை நேரங்களுக்கான கட்டுப்பாடுகள் மிகவும் இறுக்கமாக பின்பற்றப்படுகின்றன. மீறினால் உடனடியாக நாட்டிற்கு தண்டனையுடன் திருப்பி அனுப்பப்படும் சூழ்நிலை இளவயதில் பல்கலைக்கழக கல்வியை அனுபவித்து பயில்வதற்கு பதிலாக இறுக்கமான சூழ்நிலைக்குள் மாணவர்களை தள்ளிவிட்டு பின் அவர்களின் எதிர்காலத்தினை பற்றி கவலைப்படுவதில் அர்த்தம் இல்லையே.

மேலைத்தேய நாடுகளில் மட்டும் தான் தரமான கல்வியைப் பெறமுடியும் என்ற நிலை இன்றில்லை. இன்றைய உலகம் வணிக உலகம் இங்கு கல்வியும் வணிகமே. இது எங்கும் பொருந்தும். இலங்கையில் உள்ள மாணவர் சந்தை வாய்ப்பினை உலகம் முழுக்க இருக்கும் கல்விச்சாலைகள் நன்கே அறிந்துள்ளன.

உதாரணத்திற்கு இங்கிலாந்தினை எடுத்துக்கொள்வோமால் Bachelor degree. MASTER DEGREE முடிந்திருந்தால் 2 வருட POST STUDY WORK என்னும் வேலைவாயப்பு அனுமதியை வழங்குகிறார்கள். இது முடிந்தவுடன் அங்கு தொடர்ந்தும் நீங்கள் வதிய விரும்பினால் வருடத்திற்கு 10000 பவுண்கள் வரி கட்டுமளவிற்கான வேலை ஒன்றினை செய்யவேண்டும். ஆனால் வேலைவாய்ப்பு என்று வருமிடத்து இங்கிலாந்தைச் சேர்ந்த, ஐரோப்பியர் என்னும் வரிசையில் இறுதியாக ஆசிய நாட்டவருக்கு வாய்ப்புகள் அமைகின்றன. ஆக மொத்தத்தில்,

பணம் இருக்கிறதா? படிக்க வாருங்கள்! படித்து முடிந்ததா? சென்று வாருங்கள் என்னும் நிலைமை. அன்பானவர்களே! ஆழ்ந்து யோசியுங்கள்.

எமது நாட்டில் வேலைவாய்ப்புக்கள் நிறையவே இருக்கின்றன. அதற்கான அடிப்படை தகுதியினை நாம் பெற்றுக் கொண்டால் போதுமே! அதிக பணம் செலவிடத் தேவையில்லை! குறைந்தளவு பொருளாதார வசதி வாய்ப்பு இருப்பினும் போதுமானது. வங்கியில் பணம் காட்டவேண்டிய அவசியம் இல்லை! IELTS போன்ற ஆங்கில பரீட்சைகள் தேவையில்லை! சர்வதேச அங்கீ காரம் பெற்ற கல்விக் கூடங்கள்! விரும்பிய துறைகளில் பட்டம் பெறும் வசதி மிகக் குறுகிய பிரயாண தூரம்! கல்விக் காலம் வரைக்கும் கவலைகளற்ற கல்விச் சூழ் நிலை! இவ்வாறு எல்லாவிதத்திலும் உங்களுக்கேற்ற கல்வியினை உங்களின் விருப்பத்திற்கும், உங்களின் படிப்பிற்கும் ஏற்றவகையில் இந்தியாவில் உங்கள் கல்வியை தொடரும் வகையில் V4 EDUCATIONAL CONSIULTANCY SERVICE நிறுவனத்தினராகிய நாங்கள் எப்போதும் உங்கள் சேவைக்கென காத்திருக்கின்றோம்.

வெளிநாட்டு மாணவர்களை உள்வாங்கும் இந்திய கல்விக்கூடங்களுக்கு பணம் முக்கிய நோக்கம் என்பது உண்மை.

ஆனால் எமது மாணவர்களுக்கு கல்வியை பூரணமாக வழங்கும் கல்வி நிறுவனங்களை இனம்கண்டு எமது தொடர்பிலுள்ள கல்வி நிறுவனங்களுக்கிடையே எம் மாணவர்களுக்கு பொருத்தமானதாகவும் சரியான தெரிவாகவும் விளங்கும் கல்வி நிறுவனங்களின் அனுமதிகளை எவ்வித சிரமங்களும் இன்றி இங்கேயே வரவழைத்து தருவதுடன் மாணவர்கள் கல்வி நிறுவனத்திற்கு பயணமாகும்.

(தொடரும்)

அறியாமையைக்காட்டிலும் அடிமைத் தனம் வேறொன்றும் இல்லை. அறிவுடை மையின் குழந்தையே விடுதலையாகும். -இங்கர்சால்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அரச உடைமையாகும் வன்னி நிலப்பரப்பு

வன்னியில் நடந்த யுத்தத்தின் பின்னர் மீள் குடியேற்றம் ஆமை வேகத்தில் நடந்தேறுகின்றது.

வன்னியில் மீள்குடியேற்றம் என்பது சொந்த காணியில் குடியமர்த்துதல் என்று பொருள் கொள்வது தவறு.

படையினர் விரும்புகின்ற-அவர்கள் சிபார்சு செய்கின்ற இடங்களில் கொட்டில் அமைத்து பகலில் வெயில் இரவில் நுளம்புத் தொல்லை என்ற வதைக்குள் வாழ்வது தான் மீள்குடியமர்வு என வகை கூறும் அளவுக்கு நிலைமை உள்ளது.

இது தொடர்பில் எவரும் எதுவும் செய்ய முடியாதென்பதில் உண்மைகள் இருக்கவே செய்கின்றன.

இருந்தும் நாடாளுமன்றத்தில் இது பற்றி தாராளமாக பிரஸ்தாபிக்கலாம். ஆனால் அதற்கு நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்படும் நேரத்தை செலவிட எங்கள் எம்.பிக்களிடம் நேர ஒழுங்கமைப்பு போதாமல் உள்ளது.

தங்களின் வண்டவாளங்களை கொட்டித் தள்ளி சிங்கள மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிரிப்புக்குரியவர்களாக இருப்பதுதான் இவர்களின் தற்போதைய வகிபங்காகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்தில் எழுந்து பேசுகிறார் எனில், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிர வேண்டும்.

மறுத்துக்கருத்துரை வழங்க முடியாமல் திணற வேண்டும்.

இப்படித்தான் எங்கள் முன்னைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். ஆனால் இப்போதெல்லாம் அப்படியானவர்கள் கிடையாது.

தமிழ் எம்.பிக்கள் ஆளுமை நிறைந்தவர்களாக தமிழ் மக்களின் நலனில் அக்கறையுடையவர்களாக இருந்திருந்தால், கைதடி சரவணை தர்சிகா குடும்பம் இத்துணை துன்பப்பட்டிருக்க வேண்டி வந்திராது.

அட! ஒரு ஆறுதலுக்கேனும் அறிக்கை எழுத மறந்து போன எங்கள் எம்.பிக்கள் வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு கூப்பிய கரத்துடன் வருவார்கள்.

இவர்களுக்குப் பாடம் புகட்ட தமிழ் மக்கள் துணியாதவரை எங்கள் எதிர்காலம் இருள் மயமானதாக இருக்கும். இது பற்றி இவ்விடத்தில் அடிக்கடி கூறிவருகின்றோம்.

எதுவாயினும் வன்னி நிலைப்பரப்பின் பெரும் பகுதியை அரசு தனது உடைமையாக்கிக்கொள்ளும் அபாயத்தை தடுக்க, நடவடிக்கை எடுப்பது காலத்தின் கட்டாய தேவையாகும்.

இது விடயத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கரிசனை கொள்ள வேண்டும். நடக்குமா? அல்லது இம்மியும் சிரிக்காத கலைஞர் கருணாநிதியுடன் சிரித்துக் கொண்டு புகைப்படம் எடுக்கும் அறியாமைத்தனம் தொடருமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# வாக்காளர் இடாப்பில் பதிவு செய்து கொள்ளுங்கள்

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் வாக்காளர் டாப்பில் பதிவு செய்வது காலத்தின் கட்டாய தேவை என யாழ்.மாவட்டஅரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் வாக்காளர் இடாப்பு பதிவு நடவடிக்கைகள் எமது சமூகத்தின் அரசியல். பிரதிநிதித்துவம்,பொருளாதார மேம்பாடு, உயர்கல்வித் தகைமை, வதிவிட உறுதிப்படுத்தல் என்பவற்றிற்கு அடிப்படையான ஒன்றாக அமையப்போகிறது.

இந்த பதிவு நடவடிக்கைகளில் எமது மக்கள் அதிக அக்கறை எடுத்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதுடன் 18 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் தம்மை வாக்காளராக பதிவு செய்வதை அவரவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

சமூக நலன் சார்ந்த அமைப்புக்கள் குறிப்பாக சனசமூக நிலையங்கள் போன்றவை கூடிய கவனம் எடுத்து அந்தப்பகுதி கிராம சேவையாளர்களுடன் இணைந்து உரிய பதிவுகளை மேற்கொள்ள உதவவேண்டும் என வலியுறுத்துகிறோம்.

தற்காலிகமாக வெளிநாடுகளில் உள்ளவர்களையும், பணிநிமிர்த்தம் வேறு இடங்களில் இருப்பவர்களையும் தவறாது பதிவு செய்ய சகலரும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எனவே தற்போதைய சூழலில் தமிழ் மக்கள் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்வது காலத்தின் கட்டாய தேவை என்பதை நாம் வலியுறுத்துகின்றோம் என இணையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# இஸ்ரேலுக்கு ஆதரவாகவே இலங்கை அரசு செயற்படுகின்றது

## கலாநிதி கருணாரத்தின குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் தொடர்பில் இலங்கை அரசாங்கம்இரட்டை நிலைப்பாட்டை கொண்டுள்ளதாக இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின விசனம் தெரிவிக்கின்றார்.

இலங்கையில் இதுவரையில் ஆட்சியிலிருந்து வந்த அரசாங்கங்கள் பாலஸ்தீனத்திற்கான தனது ஆதரவை வழங்கி வந்த நிலையில் மகிந்த ராஜபக்ஷவின் அரசே இஸ்ரேலுக்கு ஆதரவாக செயற்படுவதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

பாலஸ்தீனத்துக்கு எதிராக இஸ்ரேலின் தாக்குதலுக்கு இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் ஆதரவு தெரிவித்திருப்பதன் மூலம் இது நன்கு தெளிவாவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே இதனை தெரிவித்திருக்கின்றார். அவர் மேலும் கூறுகையில்,

பாலஸ்தீனத்திற்கு எதிராகவும் இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் கருத்து தெரிவித்த இஸ்ரேலிய தூதுவரின் கருத்தை அவருடைய தனிப்பட்ட கருத்தென இலங்கை அரசாங்கம் கூறியிருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

அப்படி இது அவருடைய தனிப்பட்ட கருத்தாயின் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள அவருடைய கருத்து தவறு என்பதால் அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு அதற்குரிய தண்டனையும் வழங்கப்பட வேண்டும்.

அண்மையில் கோல்பேஸ் ஹோட்டலில் இஸ்ரேலின் சுதந்திர தினத்தை நடத்த இலங்கை அரசு அனுமதி வழங்கியதுடன், அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் பல அமைச்சர்களும் இந்த சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொண்டனர். இதன் மூலம் இலங்கை அரசு இஸ்ரேலின் நிலைப்பாட்டினால் இரட்டை வேடம் போடுவது நன்கு புலப்படுகின்றது.

இஸ்ரேலிய கொள்கையை இலங்கை பின்பற்றுமாயின் இலங்கையில் பாரிய அழிவுகள் ஏற்படும் என சுட்டிக்காட்டிய அவர், பாலஸ்தீனிய காணிகளை இஸ்ரேல் அபகரித்து சர்வதேச கம்பனிகளுக்கு கொடுத்துவருவது போல் இலங்கையில் தமிழ், முஸ்லிம் காணிகள் அபகரிக்கப்பட்டு சர்வதேச கம்பனிகளுக்கு கொடுக்கப்படும் நிலை ஏற்படும் எனவும் எச்சரித்தார்.

எனவே இலங்கை அரசு இஸ்ரேல் தொடர்பில் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (ச-5)

# தகவல் தொழில்நுட்ப ஆளணி மேம்பாட்டிற்கான புதிய செயற்திட்டம்

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர் பங்களிப்பை வழங்கிவரும் மைக்ரோசொப்ற், சன்மைக்ரோ சிஸ்ரம் சிஸ்கோ போன்ற நிறுவனங்கள் தகுதி வாய்ந்த ஆளணியின் தேவை கருதி கற்கை நெறிகளையும் பரீட்சைகளையும் நடத்தி அங்கத்துவ சான்றுதழ்களை வழங்கிவருகின்றன. சர்வதேச தொழிற் சந்தையில் தகவல் தொழில்நுட்பத்துறையில் மேற்குறித்த தகைமையுடையோரை உயர் தொழில்களில் பணிக்கமர்த்தப்படுகின்றனர்.

இக்கற்கை நெறிகள் மூலம் யாழ். மாணவர்களும் பயனுற வேண்டும் என்ற நோக்கில் இல. 324 பலாலி வீதியில் அமைந்துள்ள எம்சிஎஸ் தகவல் தொழில்நுட்ப வளாகம் தற்போது உலகில் முன்னணி நிறுவனங்களின் வலைப்பின்னல்களுடன் இணைந்துள்ளது.

இதனால் எமது பிரதேச மாணவர்களும் நேரடியாக மைக்கிரோசொப்ற் (Microsoft), சன் மைகிரோசிஸ்ரம் (Sun Micro System ), டெல் (Dell), எச்பி (HP), ஓராக்கிள் (Oragle), ஐபிஎம் (IBM), ஐசிடிஎல் (ICDL), ரோபிள் (Toefl) மற்றும் சீமா (CIMA) நிறுவனங்களின் கற்கை நெறியினை இங்கு பயில்வதுடன் மேற்படி நிறுவனங்களின் யாழ்ப்பாணத்தில் அங் கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையமாகவும் எம்சிஎஸ் (MCS) வளாகம் விளங்குகின்றது.

தகவல் தொழில்நுட்ப ஆளணியினை மேம்படுத்தும் செயற் திட்டத்தின் (ICT CAPCITY BUILDING PROGRAM) கீழ் தற்போது ஜனாதிபதி அலுவலகம், ஈ-சிறிலங்கா, அமைப்பு மேற்படி நிறுவனங்களின் தகவல்தொழில்நுட்ப கற்கைநெறியினை பூர்த்திசெய்து அப்பரீட்சையில் சித்தியடைவோருக்கு அந்நிறுவனங்களின் பரீட்சைக்கட்டணத்தை முழுமையாகவோ, பகுதியாகவோ மீளளித்துவருகிறது. இதுவரை 64 எம்சிஎஸ் வளாக மாணவர்கள் இத்திட்டத்தின் கொடுப்பனவை பெற்றுள்ளார்கள்.

வெளிநாட்டு மாணவர்கள் அதிகூடிய செலவில் பயிலும் இக்கற்கை நெறியினை குறைந்த செலவில் யாழ். மாணவர்களும் பயின்று சிறந்த தகவல் தொழில்நுட்ப வல்லுனர்கள் ஆவதற்கு இது ஓர் அரிய சந்தர்ப்பமாகும். (ச-5)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### வெற்றியின் இரகசியம்



உண்மை, தூய்மை, தன்னலமின்மை-இந்த மூன்றும் உடையவர்களை நசுக்குவதற்கான ஆற்றல் சூரிய மண்டலத்தின் கீழோ, மேலோ இல்லை. ஒருவனே ஆனாலும் உலகம் முழுவதையும் எதிர்த்து நிற்கும் திறன் உடையவன் அவன்.

தான் விரும்புகின்ற வேலையாக இருந்தால் எந்த முட்டாளும் அதைச் செய்து முடிப்பான். எந்த வேலையாக இருந்தாலும் அதனைத் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவனே அறிவாளி. எந்த வேலையும் அற்பமானதல்ல.

எதிர்ச் சொல்லின்றிக் குருவிற்குக் கீழ்ப்படிவது ஒழுக்க நெறியைப் பிறழாது பின்பற்றுவது-- இதுவே வெற்றியின் இரகசியம்.

# தலிபான்களை ஒழித்துக் கட்ட
# ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தும் அமெரிக்கா

பாகிஸ்தானில் அமெரிக்க டிரோன் ஆளில்லா விமானங்கள் நடத்தி வரும் குண்டுத் தாக்குதல்களால் தமக்குப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக அங்குள்ள தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும் தங்களால் இந்த யுத்தத்தில் வெல்லமுடியும் என்று அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

பிபிசி உருது சேவையினர் நடத்திய ஒரு ஆய்வில் இப்படியான ஆளில்லா விமானத் தாக்குதல்களின் பயன்பாடு ஒபாமா அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் மும்மடங்கு அதிகரித்துள்ளது என்று தெரியவந்துள்ளது.

இந்நிலையில் உலகத்தின் வேறொரு மூலையில் இருந்தவாறு இயங்கக்கூடிய அமெரிக்காவின்ஆளில்லா இராணுவ விமானங்களின் மூலம் ஆப்கானிய எல்லையை ஒட்டிய பாகிஸ்தானின் பழங்குடியினப் பகுதிகளில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

கடந்த ஒன்றரை வருட காலத்தில் இப்படியான டிரோன் தாக்குதல்களால் நூற்றுக் கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-2)



பாலஸ்தீனத்தில் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஐ.நா. புனரமைப்புப் பணி முகவரமைப்பானது கின்னஸ் சாதனை முயற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தது. பாலஸ்தீன நகரான ரபாக்கில், ஏழாயிரத்து 500 பள்ளி மாணவர்கள், மைதானம் ஒன்றில்கூடி ஒரே நேரத்தில் பந்துகளை மேலே தூக்கி போட்டு கின்னஸ் சாதனை படைத்தனர்.

# அமெரிக்காவும் தென்கொரியாவும் எங்களை தாக்கினால்
# அணுகுண்டு வீசவும் தயங்கமாட்டோம்

## வடகொரியா கடும் சீற்றம்

(சியோல்)

அமெரிக்கா, தென்கொரியா ஆகிய இரு நாடுகள் மீது அணுகுண்டுகளை வீசி பதிலடி கொடுக்கவும் தயங்மாட்டோம் என்று வடகொரியா கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளது.

தென்கொரியாவும், அமெரிக்காவும் கூட்டு கடற்படை ஒத்திகையை செய்யத் திட்டமிட்டுள்ளது. இதற்காக அமெரிக்காவின் ஜார்ஜ் வோஷிங்டன் போர்க்கப்பல் தென்கொரியாவுக்கு வருகை தந்துள்ளது.

இந்தக் கப்பல் முழுவதும் போர் விமானங்கள் இடம்பெற்றுள்ளன. தென்கொரியாவும் கடல் பகுதியில் போர்க் கப்பலை நிறுத்தியுள்ளது. இரு நாடுகளின் கூட்டுக் கடற்படை ஒத்திகை நேற்று ஆரம்பமாகியது.

தொடர்ந்து அத்துமீறி நடந்து வரும் வடகொரியாவுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் தான் இருநாடுகளும் இந்தக் கூட்டு கடற்படை ஒத்திகையை நடத்த உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் வடகொரியா கோபம் அடைந்துள்ளது. அமெரிக்காவுக்கும், தென்கொரியாவுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஒருவேளை அமெரிக்காவும், தென்கொரியாவும் எங்களை 'தாக்கினால் நாங்கள் வேடிக்கை பார்க்கமாட்டோம். இருநாடுளின் தாக்குதலுக்கு பயந்து எங்களது இராணுவ வீரர்களோ, மக்களோ ஓடமாட்டார்கள். எதிர்த்து பதிலடி கொடுப்பார்கள் என்று வடகொரியா தெரிவித்துள்ளது.

தேவைப்பட்டால் எங்கள் வசம் உள்ள அணுகுண்டுகளை வீசித்தாக்கவும் தயங்க மாட்டோம் என்றும் அந்நாடு கடுமையாக எச்சரித்துள்ளது.

தென்கொரியாவும் அமெரிக்காவும் போர்க்கப்பலை நிறுத்திவைத்திருப்பதை கவனித்துவரும் வடகொரியா கோபத்தின் உச்சத்துக்கே சென்றுள்ளது. இருநாடுகளும் தங்கள் மீது எப்போது வேண்டுமானாலும் தாக்குதல் கொடுக்கலாம் என்ற முடிவுக்கே வந்துவிட்டது.

இதைக் கருத்தில் கொண்டு எத்தகைய சூழலையும் எதிர்கொள்ளும் வகையில் வடகொரிய இராணுவத்தை ஆயத்தப்படுத்தியுள்ளது என்று அந்நாட்டின் அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த எச்சரிக்கையை அடுத்து வடகொரியா - தென்கொரியா இடையே பதற்றம் அதிகரித்துள்ளது. (6)

# பாகிஸ்தான் அமைச்சரின் மகன் சுட்டுக்கொலை

பாகிஸ்தானின் கைபர் -பாக்துங்வா மாகாணத்தின் செய்தித்துறை அமைச்சரான மியான் இப்திகார் ஹுசைனின் மகன் மியான் ரஷித் ஹுசைன் (27) தீவிரவாதிகளால் சனிக்கிழமை சுட்டுக்கொல்லப் பட்டனர்.

பாகிஸ்தானின் நவ்சேரா மாவட்டத்தில் உள்ள பப்பி பகுதியில் உறவினருடன் நடந்து சென்றபோது அவர் பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதில் அவரது உறவினர் அம்ஜத் படுகாயமடைந்து பெஷாவரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் நடந்த பப்பி பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு தீவிரவாதிகளை தேடும் பணி நடைபெற்று வருகிறது. செய்தித்துறை அமைச்சரான மியான் இப்திகார் தீவிரவாதிகளுக்கு எதிராகப் பேசிவந்தால் தலிபான்களின் மிரட்டலுக்கு பலமுறை உள்ளானது தெரியவந்துள்ளது. (6)




# உலகின் பழைமையான எழுத்து கண்டுபிடிப்பு



(ஜெருசலேம்)

உலகின் மிகப் பழைமையான எழுத்துக்கள் பொறித்த களிமண் துண்டு ஒன்று, இஸ்ரேல் நாட்டின் ஜெருசலேம் நகரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகத் தொன்மையான நகரமான இஸ்ரேலின் ஜெருசலேம் நகரத்தின் கிழக்குப் பகுதியோடு இணைந்துள்ள, இஸ்ரேலி என்ற இடத்தில் பழைய ஜெருசலேம் அமைந்துள்ளது. இதன் தென்பகுதியில் உள்ள கோட்டைச் சுவருக்கருகில், கி.மு.10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோபுரம் ஒன்று உள்ளது.

இதன் அடியில் குவிந்திருந்த இடிபாடுகளை, சமீபத்தில் இஸ்ரேல் நாட்டின் தொல்பொருள் ஆய்வாளர்கள் அகற்றினர்.

அப்போது அந்த இடிபாடுகளுக்கிடையில் , ஒரு களிமண் துண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டு செ.மீ., அகலமும் 2.8 செ.மீ. உயரமும் கொண்ட இக் களிமண் துண்டில், 'நீங்கள், அவர்களை' என்று எழுதப்பட்டுள்ளது. இக் களிமண் துண்டின் காலம், கி.மு. 14ஆம் நூற்றாண்டாகக் கணிக்கப்பட்டுள்ளது.

அதாவது இன்றிலிருந்து 3,400 ஆண்டுகள் பழைமையானது இக்களிமண் துண்டு. இதேகாலகட்டத்தில், எகிப்தை ஆண்ட பாரோ வம்சத்தைச் சேர்ந்த அகினாட்டான் என்ற மன்னர் காலத்து 380 களிமண் துண்டுகள், எகிப்தின் எல் அமர்னா என்ற இடத்தில் ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ளன. அவற்றிலுள்ள எழுத்துக்களும், இப்போது ஜெருசலேமில் கண்டறியப்பட்டுள்ள களிமண் துண்டில் உள்ள எழுத்துக்களும் ஒத்திருக்கின்றன.

இந்தக் கண்டுபிடிப்பு மூலம், வெண்கலக் காலம் என்று வரையறுக்கப்பட்டுள்ள கி.மு14 இலேயே ஜெருசலேம் நகரம் முக்கியத்துவத்தோடு திகழ்ந்திருக்க வேண்டும் என்று ஜெருசலேத்திலுள்ள ஹீப்ரு பல்கலையின் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (6)

# இராணுவத்தை பலப்படுத்தும் சீனா ;
# கிலி கொண்டுள்ள அமெரிக்கா

## நாடாளுமன்றில் அறிக்கை தாக்கல் செய்ய வலியுறுத்து

(வோஷிங்டன்)

சீன இராணுவம் பலப்படுத்தப்படுவது தொடர்பாக நாடாளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு தமது நாட்டு பாதுகாப்புத் துறையை அமெரிக்க எதிர்க் கட்சியான குடியரசுக் கட்சியின் செனட்டர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சீனா தமது இராணுவத்தைப் பலப்படுத்தி வருவது தொடர்பாக அதிருப்தி தெரிவித்துள்ள குடியரசுக் கட்சி உறுப்பினர்களான ஜோன் கோர்னின்,ஜோன் மெகைன், ஜேம்ஸ் ரிச்,ராபர்ட்ஸ், ஜேம்ஸ் இன்ஹோப் ஆகியோர் தமது கோரிக்கையை வலியுறுத்தி பாதுகாப்புத்துறைக்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளனர்.


அந்தக் கடிதத்தில் கூறியிருப்பது, சீனா தமது இராணுவத்தைப் பலப்படுத்தி வருகிறது. நவீன ஏவுகணைகளை தயாரித்தல், ஏவுகணை தயாரிக்கும் புதிய தொழிற்சாலைகளை அமைத்தல், அதிநவீன நீர்மூழ்கிக் கப்பலை வடிவமைத்தலில் முனைப்புக் காட்டி வருகிறது.

அந்நாடு வடிவமைக்கும் நவீன ஏவுகணைகளை அவ்வப்போது சோதித்தும் வருகிறது. தமது இராணுவத்தில் ஏவுகணைப் பிரிவை வலிமையானதாக மாற்றுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறது. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட்டில் கணிசமான தொகையை ஒதுக்கீடு செய்கிறது.

சீனாவின் இத்தகைய நடவடிக்கையால் அமெரிக்க பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் அதிகரித்து வருகிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் அமெரிக்க பாதுகாப்புத்துறை இதுபற்றி கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

அமெரிக்காவின் 2000ஆம்ஆண்டு தேசிய பாதுகாப்பு சட்டப்படி, சீனாவின் இராணுவ செயல்பாடு குறித்து கண்காணித்து நாடாளுமன்றத்தில் பாதுகாப்புத் துறை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். ஆனால் பாதுகாப்புத்துறை சமீப காலமாக இந்தப்பொறுப்பை மறந்து செயல்படுகிறது.

சீனாவின் இராணுவ நடவடிக்கை தொடர்பாக கடந்த சில மாதங்களாக நாடாளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. இதுஏன்? இதற்கான விளக்கத்தை அளிக்க வேண்டும். அத்துடன், நிலுவையில் உள்ள அறிக்கைகளை உடனடியாக தாக்கல் செய்ய வேண்டும் என்று குடியரசுக் கட்சி செனட்டர்கள் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.(6)




அமெரிக்கா வோஷிங்டனில் நடந்த கூடைப்பந்தாட்டத்தை அந்நாட்டு அதிபர் பராக் ஒபாமா காண வந்தார்.

# முரளிதரன் ஓய்வுக்கு பின் இலங்கை அணி

# இந்திய அணி பதிலடி கொடுக்குமா?

# இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்




(கொழும்பு)

இலங்கை, இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் இன்று கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் கடந்தவாரம் காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் இலங்கை அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந் நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் இன்று கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமாகின்றது.


இப் போட்டியில் முத்தையா முரளிதரனும் லசித் மலிங்கவும் இல்லாத நிலையில் இலங்கை அணி களமிறங்கவுள்ளது.

இதில் நட்சத்திர சுழல் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் டெஸ்ட் கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெற்ற நிலையில் இலங்கை அணி எதிர் கொள்ளும் முதலாவது டெஸ்ட் இதுவாகும்.

இதேபோல் உபாதை காரணமாக லசித் மலிங்கவுக்கும் இப் போட்டியில் ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. கடந்த போட்டியில் முரளிதரனும் மலிங்கவும் இணைந்து 15 விக்கெட்டுக்களை பகிர்ந்து கொண்டதன் மூலம் இலங்கை அணி வெற்றி இலகுவாயிற்று.

இப் போட்டியில் டில்கார பெர்ணான்டோ, அஜந்த மெண்டிஸ் ஆகியோர் இலங்கை அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்திய அணி இலங்கைக்கான கடந்த




சுற்றுப்பயணத்தில் மெண்டிஸின் பந்துவீச்சில் சிக்கி டெஸ்ட் தொடரை இழந்தது. எனினும் மெண்டிஸின் பந்துவீச்சு முறை தற்போது எதிரணிக்கு இலகுவாகி உள்ளது.

இலங்கை அணியின் துடுப்பாட்ட வரிசையில் பரணவிதாரண, திலகரட்ண டில்சான், மஹேலஜெயவர்த்தனா, குமார் சங்கக்கார ஆகியோர் சிறப்பான நிலையில் உள்ளனர்.

இந்திய அணியை பொறுத்தவரை முதலாவது போட்டியில் மோசமாக தோல்வியடைந்ததால் இப் போட்டியில் பதிலடி கொடுக்க வேண்டிய நிலையிலுள்ளது. அத்துடன் தொடரை சமன் செய்ய வெற்றிபெற வேண்டிய கட்டாயம் இந்திய அணிக்கு உள்ளது.

இந்திய அணியில் சகீர்கான், சிறிசாந்த்




இல்லாமையால் பந்துவீச்சில் பலவீனமாக காணப்படுகிறது. இதேபோல் முன்னணி சுழற் பந்துவீச்சாளரான ஹர்பஜன் சிங் முதலாவது டெஸ்டில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

இந் நிலையில் பந்துவீச்சு பலவீனத்தை சரிசெய்து துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக விளையாட வேண்டிய நெருக்கடியுள்ளது.

இந்திய அணியில் பலமான துடுப்பாட்ட வரிசையில் கடந்த போட்டியில் சேவாக், லக்ஷ்




மன், டெண்டுல்கர் ஆகியோரே சிறப்பாக செயற்பட்டனர். ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் காம்பீர், ராவிட், தோனி ஆகியோர் சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இன்றைய போட்டி காலை 10 மணிக்கு ஆரம்பமாகிறது.

**34ஆவது முறையாக இன்று மோதல்**

இலங்கை-இந்திய அணிகள் இன்று மோதுவது 34ஆவது டெஸ்ட் போட்டியாகும். இது வரை நடந்த 33 டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி 12 போட்டிகளிலும் இலங்கை அணி 6 போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ளதுடன் 14 போட்டிகள் சமனிலையானது.

## ஜேர்மனி பார்முலா-1 கார் பந்தயம் பெர்ணான்டோ அலோன்சோ சம்பியன்

(ஜேர்மனி)

ஜேர்மனியில் நடந்த கிராண்ட் பிரிக்ஸ் பார்முலா-1 கார் பந்தையத்தில் பெராரி அணியின்ஸ்பெயின்வீரர்பெர்ணான்டோஅலோன்சோ சம்பியன் பட்டம் வென்றார்.

ஜேர்மனியில் ஆண்டின் 11ஆவது கிராண் பிரிஸ் பார்முலா-1 கார் பந்தையம் நடந்தது. இதில் அபாரமாக செயல்பட்ட பெராரி அணியின் ஸ்பெயினின் வீரர் பெர்ணான்டோ அலோன்சோ முதலிடம் பிடித்து சம்பியன் பட்டம் வென்றார்.

இவரைத் தொடர்ந்து பெடாரி அணியின் மற்றொரு வீரர் பிளிப்மாசா இரண்டாவது இடம் பிடித்தார். ஆர்.பி.ஆர்.ரெனோல்ட் அணியின் செபஸ்ரியன் வெட்டேல் மூன்றாவது இடம் பிடித்தார். மெக்லாரன் மெர்சிடாஸ் அணியின் இங்கிலாந்து வீரர்களான லீவிஸ் ஹாமில்டன், ஜென்சன் பட்டன் முறையே ஐந்தாவது ஆறாவது இடம் பிடித்தனர். போர்ஸ் இந்தியா-மெர்சிடா அணி சார்பில் விளையாடிய அட்ரியன் சுடில் 17ஆவது இடம் பிடித்து ஏமாற்றினார்.

**ஹாமில்டன் முதலிடம்**

இதுவரை நடந்துள்ள 11 கிராண்ட் பிரிக்ஸ் பார்முலா-1 கார் பந்தையத்தின் முடிபில் மெக்லாரன் மெர்சிடஸ் அணியின் இங்கிலாந்து வீரர்களான லீவிஸ் ஹாமில்டன் ஜென்சன் பட்டன் முறையே 157, 143 புள்ளிகளுடன் ஒட்டுமொத்த சம்பியன் பட்டத்திற்கான வீரர்கள் வரிசையில் முதலிரண்டு இடங்களில் உள்ளனர்.

தலா 136 புள்ளிகளுடன் ஆர்.பி.ஆர். ரெனால்ட் அணியின் மார்க் வெப்பர் செபஸ்டியன் வெட்டேல் மூன்றாவது இடத்தில் உள்ளனர். பெராரி அணியின் பெர்ணான்டோ அலோன்சா 123 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலுள்ளார்.

## மெக்ராத்-சாரா நிச்சயதார்த்தம்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய கிரிக்கட் அணியின் முன்னாள் வீரர் மெக்ராத் தனது வாழ்க்கையின் இரண்டாவது இன்னிங்சை ஆரம்பிக்கிறார். மனைவி மறைந்த சோகத்தில் இருந்து மீண்ட இவர் சாராலியானார்டியுடன் திருமண நிச்சயதார்த்தம் செய்து கொண்டுள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கிளன் மெக்ராத் கடந்த 1999ல் இங்கிலாந்தை சேர்ந்த ஜேன் என்பவரை காதலித்து திருமணம் முடித்தார். இவர்களுக்கு ஜேம்ஸ் (10), ஹோலி (8) என்ற இரண்டு குழந்தைகள் உண்டு. மார்பக புற்று நோயால்மிக நீண்டகாலம் அவதிப்பட்ட ஜேன் (42), கடந்த 2008 இல் மரணமடைந்தார்.

**ஐ.பி.எல். சந்திப்பு**


இதற்குப்பின் மார்பக புற்று நோய் தொடர்பான விழிப்புணர்வு பணிகளில் மெக்ராத் தீவிரமாக ஈடுபட்டார். ஜேன் நினைவில் வாடிய இவரது வாழ்க்கையில், இத்தாலியை சேர்ந்த சாராலியானார்டி, வசந்தத்தை ஏற்படுத்தினார். கடந்த 2009 இல் தென்னாபிரிக்காவின் நடந்த ஐ.பி.எல். விருந்தில் இருவரும் முதலில் சந்தித்துக்கொண்டனர்.

தொடர்ந்து நெருக்கமாக பழகிய இவர்களது திருமண நிச்சயதார்த்தம் மிகவும் ரகசியமாக நடந்துள்ளது. இதற்கான வைர மோதிரத்தை சாரா அணிந்துள்ளார். பேஷன் மற்றும் உட்கட்டமைப்பு டிசைனராக பணிபுரியும் இவர், மெக்ராத்தின் குழந்தைகளிடம் மிகவும பாசமாகவுள்ளாராம்.

மனைவி மறைந்து இரண்டு ஆண்டுகளுக்கு பின், 40 வயதான மெக்ராத், 28 வயதான சாரால்யானார்டியை கைப்பிடிக்கவுள்ளார். இதுகுறித்து மெக்ராத் கூறுகையில்.

ஜேன் மறைந்தபோது, எனது ஒரு பகுதி செத்துவிட்டதாக உணர்ந்தேன். இன்னொரு பெண்ணை காதலிப்பேன் என்றுநினைத்துக் கூடப்பார்க்கவில்லை. ஆனால், சாரா எனது மனதை முழுமையாக மாற்றுவிட்டார்.

இனி, அவர் இல்லாமல் ஒருவாழ்க்கையில்லை. கடந்தவாரம் எங்களது திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. மிகவும் மகிழ்ச் சியாகவுள்ளோம். விரைவில் திருமணம்முடிக்க உள்ளோம் என்றார்.







யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகு மாணவர்களினால் யாழ். மாவட்ட ஹொக்கி விளையாட்டுக்கழகங்களுக் கிடையே நடத்தப்பட்ட ஹொக்கி போட்டியின் இறுதிப்போட்டியில் வெற்றிபெற்ற அணி வீரருக்கு பதக்கம் வழங்கப்படுவதையும் சம்பியனான கிராஸ் கொப்பர்ஸ் மற்றும் இரண்டாம் இடத்தை வென்ற யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அணி வீரர்களையும் படங்களில் காணலாம்.

# வன்னியில் வாக்காளர் பதிவு பெரும் மந்தமாக உள்ளது

## நடவடிக்கை எடுக்குமாறு சிறிதரன் எம்.பி. கோரிக்கை

தற்போது இடம்பெற்றுவரும் வாக்காளர் பதிவில் தமிழ் மக்கள் தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்வதில் அதீத கவனம் செலுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி முடிபுறுத்தப்படும் வாக்காளர் பதிவில் தமிழ் மக்கள் அக்கறைக் கொள்ளத் தவறும் பட்சத்தில் தமிழ் மக்களுக்கு சட்டரீதியாகக் கிடைக்க வேண்டிய பலவற்றை இழக்க வேண்டிய அபாயம் ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாக்காளர்களாகத் தம்மைப் பதிவு செய்வதில் வன்னி மக்கள் அக்கறை கொள்ளாமலும்,அந்தத் தகவலை அறியாமலும் இருப்பது கவலைக்குரியது.

வன்னியில் வாக்காளர்களாகப் பதிவு செய்யும் நடவடிக்கை பெரும் மந்தமாக இருப்பதாகக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன்,

பிரதேச செயலகங்கள்,கிராம உத்தியோகத்தர்கள்,பொதுஅமைப்புக்கள் தீவிரமாகச் செயற்பட்டு தகைமையுடைய சகல மக்களையும் வாக்காளர்களாகப் பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு தமிழனத்திற்கு உதவ வேண்டும் எனக் கேட்டுள்ளார். (ந)

## பொலிஸ் மாஅதிபரை பதவி...

யிட்டிருந்தார். ஆனால் ஜே. வி.பி. உறுப்பினர் ஒருவர் தாக்கியமையால் தலையில் ஏற்பட்ட காயத்தால்தான் இம் மாணவன் இறந்து விட்டார் என்று மறுநாள் அறிக்கை விட்டிருந்தார்.

இந் நிலையிலேயே பொறுப்பில்லாமல் அறிக்கை விட்டுக் கொண்டு ஜனாதிபதியின் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஏற்ப செயற்பட்டு வரும் பொலிஸ்மா அதிபர் உடனடியாகக் கட்டாயம் பதவி விலக வேண்டும் என்று அனுரகுமார திஸாநாயக்க கோரியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பொலிஸாரே இம் மரணத்திற்குக் காரணமானவர்கள் என்பது பொலிஸ்மா அதிபருக்கு நன்றாகவே தெரியும்.

பொலிஸ் மா அதிபர் அப் பொலிஸாருக்கு எதிராகக் கட்டாயம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர் அந் தப் பொலிஸாரைக் காப்பாற்றவே முயல்கின்றார்.

இப்படிப்பட்ட பொலிஸ் மாஅதிபர் நாட்டுக்குத் தேவையில்லை. உயர் கல்வித் துறை அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இந்த அறிக்கையை வெளியிட்டிருந்தால் நாம் அக்கறைப் பட்டிருக்கமாட்டோம்.

எவரும் அவரின் அறிக்கையைக் கணக்கில் எடுத்திருக்க மாட்டார்கள். ஏனெனில் அவர் நீதிமன்றத்தைப் பற்றி தரக் குறைவாகப் பேசி இருவருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்தவர்.

ஆனால் பொலிஸ் மாஅதிபர் அவ்வாறு தரம் கெட்ட முறையில் நடந்து கொள்கின்றமையை ஏற்கவே முடியாது. நாட்டில் சட்டமும் ஒழுங்கும் என்ன ஆவது?

பொலிஸாரையும் தப்ப வைத்து அவரும் தப்புகின்றமைக்காகவே இது இயற்கை மரணம் என்று ஒரு பெரிய கதையைக் கட்டினார் பொலிஸ் மாஅதிபர்.

பின் அரசின் ஆலோசனைக்கு அமையவே ஜே.வி.பியை அதில் சம்பந்தப்படுத்தி வம்புக்கு இழுத்துள்ளார். அவர் அரசைத் திருப்திப் படுத்துகின்றமை மூலமாகவே பதவி நீடிப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றார். (ச-5)

## கறுப்பு...

பெற்றபோது வெலிக்கடைச் சிறைச்சாலையின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த பீரங்கிப் படைப் பிரிவில் லெப்டினட்டாகப் பணியாற்றினார் என்ற தகவலை அப்போது கைதியாக இருந்து அன்றைய தாக்குதலில் உயிர் பிழைத்தவரும் தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சருமான ஒருவர் கூறியுள்ளார். (ச-5)

## புலிகளின்...

பின்போது இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வியட்நாம் இணக்கம் வெளியிட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன் இதன்போது இலங்கையின் வடக்குப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பகுதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டமைக்கு வியட்நாம் ஒத்துழைப்பு வழங்க இணங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை வியட்நாமின் இலங்கைக்கான தூதரகம் மீண்டும் எதிர்வரும் 2011 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கொழும்பில் திறக்கப்படும் என லங்கா பிஸ்னஸ் ஒன்லைன் செய்தி வெளியிட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான 40 வருட இராஜதந்திர உறவுகளைப் புதுப்பிக்கும் நோக்கில் இரண்டு நாடுகளின் பிரதிநிதிகளும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். (ச-5)

## தமிழ்த்...

பொருத்தமான தீர்வை அடைய முடியும்.

இந்த விடயம் சம்பந்தமாக நாம் அரசுடன் தற்போது இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற தமிழ்க் கட்சிகளான இ.தொ.க., மலையக மக்கள் முன்னணி, தேசிய தொழிலாளர் காங்கிரஸ் போன்றவற்றுடன் பேசி வருகின்றோம் என்றார். (ச-5)

## இந்திய அரசின் செல்லப்...

அவர்களின் சொந்தக் கிராமங்களில் குடியிருந்ததற்குக் கூட அடையாளம் இல்லை. அந்தக் கிராமங்களில் சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்புதான் தொடர்ந்திருக்கின்றது.

மத்திய அரசு சிங்கள அரசைச் செல்லப் பிள்ளையாக நடத்தி வருகின்றது. அந்தத் துணிச்சலில்தான் ராஜபக்ஷ மத்திய அரசின் இந்தியக் குழுவினரை தமிழர்கள் வாழும் பகுதிக்கு அனுமதிக்கமாட்டோம் எனக் கொக்கரித்திருக்கின்றார்.

இது வன்மையாக கண்டனத்திற்குரியது. இந்திய அரசுக்குச் சவாலாகச் செயற்படும் இலங்கை அரசுக்குப் பாடம் புகட்ட வேண்டும். தமிழர் பகுதியிலிருக்கும் இராணுவத்தை அப்புறப்படுத்த வேண்டும்.

தமிழர்களுக்கு மறுவாழ்வளிக்கும் பணியை இந்திய அரசு பொறுப்பேற்றுச் செய்ய வேண்டும். இந்த ஆற்றலும் செயற்றிறனும் மத்திய அரசுக்கு இருக்கின்றது என நம்பித் தான் இந்த வேண்டுகோளை முன்வைக்கின்றோம்.

இந்திய அரசின் தவறுதலான வெளியுறவுக் கொள்கைதான் குறிப்பாகத் தமிழக மீனவர்கள் பாதிக்கப்படுவதற்கு முக்கிய காரணமாகவுள்ளது.

இந்திய அரசு சிங்களஅரசுடன் கொண்டுள்ள வெளியுறவுக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும். தமிழக அரசு தமிழக முதலமைச்சருடன் பேசி அதன் அடிப்படையில் இலங்கை அரசுடன் ஒப்பந்தம் போட வேண்டும்.

தமிழக அரசுடன் கலந்து பேசாமல் இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டால் தமிழர்களை அவமதிக்கும் செயலாகும் என்று தெரிவித்தார். (ச-5)

## வன்னியில் குடிப்பரம்பலை ஏற்படுத்த...

இலங்கையில் விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகத் தோல்வியடையச் செய்து விட்டதாகவும் நாட்டில் போர் முடிபுக்கு வந்து விட்டதாகவும் கடந்த ஆண்டு அரசு அறிவித்தது.

இதன் பின்னர் விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கான மறுவாழ்வு குறித்து பல தரப்பிலிருந்து குரல்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இந் நிலையில் தமது அமைப்பின் முன்னாள் போராளிகளுக்கும் இப்படியான மறுவாழ்வு நடவடிக்கைகள் தேவை என புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மறுவாழ்வு அமைச்சர் டியூ.குணசேகரவிடம் வலியுறுத்தியுள்ளார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு இந்தக் கோரிக்கை ஏன் என்று சித்தார்த்தன் பி.பி.சி. தமிழோசைக்குக் கூறியதாவது,

புனர்வாழ்வு என்ற விடயங்களில் அரசு மாத்திரமல்ல சர்வதேச நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் சபை அனைத்துமே விடுதலைப் புலிகளின் மறுவாழ்வைப் பற்றித்தான் கதைக்கின்றார்கள்.

ஆனால் இந்தப் போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டு தங்களுடைய கணவன்மார்களையிழந்த, பிள்ளைகளையிழந்தவர்கள் குறித்து எந்த நடவடிக்கையும் இல்லை.

இப்படியான ஒரு பெருந்தொகையான மக்கள் மிகவும் கஷ்டமான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து வருவதாக இவர்களுக்கும் புனரமைப்பு வேண்டும் என்பதைத்தான் குணசேகரவிடம் கேட்டிருந்தேன்.

அனைத்து இயங்களுமே இலங்கை, இந்திய ஒப்பந்தங்களுக்குப் பிறகு கூட ஆயுதம் வைத்திருக்கின்றார்கள். அவர்களுக்கும் புனர்வாழ்வளிக்க வேண்டும்.

இது ஒரு சமூகப் பிரச்சினையாக வருகின்றது என்ற ஒரு பயந்தான் எனக்கு இருக்கின்றது. விடுதலைப்புலிகளுக்கு புனர்வாழ்வு கொடுக்க வேண்டாம் என்றும் கூறவில்லை. அனைவருக்குமே கொடுங்கள் என்ற அந்த வாதத்தைத்தான் நாங்கள் முன்வைத்திருக்கின்றோம்.

இலங்கையில் அரசியல் யாப்பினை மாற்றுவதற்கான இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகச் சொல்லப்பட்டு வருகின்ற நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர்த்து மற்ற பிரதான தமிழ்க் கட்சிகளாக இருக்கக் கூடிய நீங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி., ஆனந்த சங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற கட்சிகள் எல்லாம் இணைந்து ஒரு குழுவை அமைத்து பல முறை கூடி விவாதித்துள்ளீர்கள்.

ஆனால் இந்தக் கூட்டத்தில் என்ன விவாதிக்கப்பட்டது? அடுத்த கட்டமாக என்ன நடவடிக்கை எடுக்க இருக்கின்றீர்கள்? என்பது போன்ற தகவல்கள் வெளிவராமல் இருக்கின்றதே என பி.பி.சி. கேட்டதற்கு பதிலளித்த அவர்,

சர்வதேசத்தைப் பொறுத்தவரையில் இந்தியாவாக இருந்தால் என்ன. மற்றமற்ற நாடுகளாக இருந்தால் என்ன தூதரகங்களாக இருந்தால் என்ன அவர்களிடம் தமிழ்க் கட்சிகள் முக்கியமாக அனைத்தும் அதிகாரப் பரவலாக்கம் சம்பந்தமாக வித்தியாசம் வித்தியாசமான கோரிக்கைகளை முன்வைக்கின்றனர்.

இந்த நிலையில் நீங்கள் அனைவருமே ஒரு பிரச்சினையை முன்வைக்க முடியுமா? என்ற கேள்வியைப் பலர் கேட்டிருக்கின்றார்கள்.

இதன் அடிப்படையிலேயேதான் இப்படியானதொரு முயற்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. முக்கியமான விடயம் என்னவென்றால் இரண்டு விடயத்தை பார்க்கின்றோம்.

ஒன்று அனைவருக்குமாக ஒரு பிரேரணையை முன்வைக்க முடியுமா? அடுத்ததாக இன்று வடக்குக் கிழக்கில் இருக்கக் கூடிய பல பிரச்சினைகள் இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளுமாகச் சேர்ந்து முகம் கொடுக்க வேண்டும்.

இந்த இரண்டு விடயங்களின் அடிப்படையிலேயேதான் நாங்கள் இனி பேச்சை ஆரம்பித்திருக்கின்றோம். இந்த விடயங்களிலே எங்களுக்குள்ளே ஒரு ஒற்றுமையிருக்க வேண்டும் என்ற ஒரு நிலைப்பாட்டை மிகத் தெளிவாக வைத்திருக்கின்றோம்.

வன்னிப் பிரதேசத்தில் நிச்சயமாக ஒரு பெரிய குடிப்பரம்பல் மாற்றத்தை கொண்டு வருவதிலே மிக அக்கறையாக அரசு செயற்படுகின்றது என்று எங்களால் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

அரசு இந்தக் குடிப்பரம்பலை மாற்ற வேண்டும் என்ற அந்த நோக்கத்துக்காகச் செய்யப்படுகின்ற எந்தவொரு குடியேற்றத்தையும் முற்றுமுழுதாக எதிர்க்கின்றோம்.

விசமத்தனமான விடயங்களை நிறுத்துவதற்கு நாங்கள் அனைவரும் ஒன்றுபடுவது என்பதில்தான் அக்கறை காட்டுகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் சேர்த்துக் கொண்டால் அனைத்துக் கட்சிகளுமே இருக்கின்ற ஒரு நிலையில் சர்வதேச ரீதியில் பெரிய பிரச்சினையாக எடுக்க முடியும் என்றார். (ச-3)

## தமிழ்க்...

அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

அப்போது எழுந்த கருத்து முரண்பாடு காரணமாகச் சில தமிழ்க் கைதிகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது காயமடைந்த 36 வயதான தமிழ் இளைஞர் ஒருவருக்கு சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டது எனவும் தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா கூறுகையில்,

இந்த விடயம் குறித்த உண்மை நிலையை அறிந்து கொள்வதற்காக சிறைச்சாலை திணைக்களத்துடன் நான் தொடர்பு கொள்ள முயன்றபோதும் அது முடியாதுபோய்விட்டது.

எனினும் இவ் விடயம் குறித்து அமைச்சர் டியூ.குணசேகரவின் கவன்த்திற்குக் கொண்டு செல்லவுள்ளேன் என்றார். (ச-5)

Mr. Concrete
For all your concrete needs!
SLSI – தரத்திற்கு அமைய நவீன இயந்திரங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டவை.
உங்கள் சகல கொங்கிறீட் தேவைகளுக்கும்
- கொங்கிறீற் கற்கள்
- ஓட்டைக் கற்கள்
- வேலித் தூண்கள்
இலவச விநியோகம்

Sales Office: 124, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் www.MrConcrete.lk
Factory: கொடிகாமம் வீதி, புலோலி. Tel: 0217 222 333

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.